பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 16 திங்கட்கிழமை 01.03.2021 கதிர் 116

இனி து ரகசியம் அல்ல!
'இலங்கை வான் பரப்புக்குள் இந்திய யுத்த விமானங்கள் ஊடுருவல்?' – என்ற தலைப்பில் வெள்ளி மாலை காலைக்கதிர் வெளியீட்டின் முன்பக்கப் பிரதான செய்தி இருந்தது. பரபரப்பாக வாசகர்கள் அதைத் தேடி வாசித்தார்கள். பக்கம்02

# வடக்கு, கிழக்கு முதலமைச்சர் வேட்பாளர்கள் பற்றி இப்போதைக்கு அலட்டிக்கொள்ள விரும்பவில்லை

## உரிய நேரத்தில் தமிழ்க் கூட்டமைப்பு தீர்க்கமான முடிவெடுக்கும் என்கின்றார் தலைவர் சம்பந்தன்



மாகாண சபைகளுக்கான தேர்தல் தொடர்பில் அரசு இன்னமும் உத்தியோகபூர்வ அறிவிப்பு எதையும் விடுக்கவில்லை. இந்த நிலையில், வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர்கள் தொடர்பில் இப்போதைக்கு நான் அலட்டிக்கொள்ள விரும்பவில்லை. முதலமைச்சர் வேட்பாளர்கள் குறித்து உரிய நேரத்தில் தீர்க்கமான முடிவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்கும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார். 2

## எத்தனை பிரேரணைகள் நிறைவேறினாலும் எங்களை எவரும் எதுவுமே செய்ய முடியாது!

### பிரதமர் மஹிந்த திட்டவட்டம்

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக வெளிநாடுகள் எத்தனை பிரேரணைகளையும் கொண்டுவரலாம். அவை நிறைவேறினால் என்ன, நிறைவேறாவிட்டால் என்ன? அதனால் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. எமது அரசின் வெளிநாட்டுக் கொள்கை நிலைப்பாட்டில் நாம் 2



## இந்தியாவைப் பகைத்தால் இலங்கைக்குப் பேராபத்து!

### சந்திரிகா எச்சரிக்கை

சீனாவை மடியில் வைத்துக்கொண்டு, பாகிஸ்தானை அரவணைத்துக்கொண்டு இந்தியாவைப் பகைப்பதால் எதையோ சாதிக்க முடியும் என்று இலங்கை கனவு காண்கின்றது. 2



## உடல் அடக்கத்துக்கு அனுமதி: எந்தப் பிரச்சனையும் இல்லை

### அஸ்கிரிய பீடம் அறிவிப்பு



இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதியளித்துள்ளமையில் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. சுகாதாரத் தரப்பினரின் ஆலோசனைக்கமைய இந்த விவகாரத்தில் தீர்மானத்தை எடுக்குமாறு தான் நாம் ஆரம்பத்திலிருந்து வலியுறுத்தினோம்.

– இவ்வாறு அஸ்கிரிய பீடத்தின் அநுநாயக்க மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்தார்.

(விரிவான செய்தி 12ஆம் பக்கத்தில்...)

## வடக்கு மாகாணத்தில் மேலும் 7 பேருக்கு கொரோனா உறுதி



(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் மேலும் 7 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது.

இவர்களில் ஒருவர் கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவிலுள்ள தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தவர் என வடக்கு 11

## சாதாரண தரப் பரீட்சை இன்று ஆரம்பம் வடக்கில் 44ஆயிரம் பேர் தோற்றுவர்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்ச் 01

இன்று ஆரம்பமாகும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு வடக்கு மாகாணத்தில் 44 ஆயிரத்து 245 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

நாடு பூராகவும் இடம்பெறும் இந்தத் தேசிய பரீட்சையில் வடக்கின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த பாடசாலைப் பரீட்சார்த்திகள் மற்றும் தனிப்பட்ட 11

## ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி கோரி மார்ச் 7 'கறுப்பு ஞாயிறு' தினம்

### அனுஷ்டிக்க பேராயர் அழைப்பு

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கு நீதி கிடைக்காமையை முன்னிறுத்தி எதிர்வரும் 7ஆம் திகதியை கறுப்பு ஞாயிறாக அனுஷ்டிக்கும்படி கொழும்பு பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை 2



## கொரோனாச் சாவு 471 ஆக அதிகரிப்பு

இலங்கையில் இறுதியாக 7 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன என அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்துள்ளது.

6 ஆண்களும், ஒரு பெண்ணும் இறுதியாக உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாவால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 471 ஆக அதிகரித்துள்ளது.

## மரண வீட்டில் குழு மோதல்; 6 பேர் வைத்தியசாலையில்

### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா நிருபர்)

வவுனியா, சிதம்பரபுரம் – மதுராநகர் பகுதியில் மரண வீட்டில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் மரணக்கிரியை நடந்த வீட்டில் ஆச்சிபுரம் 2

### உடன் பிறவாச் சகோதரனால்

# ஏழு வயது சிறுவன் அடித்துக் கொலை!

### கிளிநொச்சியில் கொடூரம்

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சியில் உடன் பிறவாச்சகோதரனின் தாக்குதலுக்கு இலக்கான 7 வயதுச் சிறுவன் ஒருவன் சிகிச்சை பலனின்று உயிரிழந்துள்ளார்.

அப்துல் ரகுமான் சயா எனும் சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சிறுவனின் தாயார் கடந்த 20ஆம் திகதி தனது சொந்த ஊரான மட்டக்களப்புக்குச் சென்றுள்ளார். குறித்த சிறுவனுக்கு 9 வயதில் மூத்த சகோதரனும், 4 வயதில் இளைய சகோதரனும் உள்ளனர்.

சிறுவனின் தந்தை தனது உடன் பிறந்த சகோதரனின் வீட்டில் மூன்று பிள்ளைகளையும் கைவிட்டு கடந்த 22ஆம் திகதி தலைமறைவாகியுள்ளார். அவர் தலைமறைவாகிய நேரம் சகோதரனின் வீட்டில் கட்டி வைக்கப்பட்டிருந்த மாடு ஒன்றும் 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நேற்று மதியம் திடீரென கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியின் மூத்த பிரஜை ஒருவர் – அவரசப்பட்டு தொலைபேசி அழைப்பு எடுத்தார். யாழ்ப்பாண அரசியலில் நீண்டகாலம் கனகாத்திரமாக செல்வாக்குச் செலுத்திய தொழிற்சங்கவாதி அவர். எங்கள் பத்திரிகையைத் தவறாமல் வாசிப்பவர். அரசியல் மற்றும் தொழிற்சங்கப் பணிகளில் இருந்து வயோதிபம் காரணமாகச் சற்று ஒதுங்கியிருந்தாலும் செய்தித் தேடலில் கனகாலம் நீடிப்பவர்.

*"உங்கள் செய்தியை நேற்று (சனியன்று) வாசித்தேன். அதில் போடப்பட்டிருந்த சிவப்பு நிற ஜெட் விமானங்கள் – அவை இந்திய விமானப் படையைச் சேர்ந்தவை – திடீரென இங்கும் தாறுமாறாக – குறிப்பாகக் கடற்கரைப் பிரதேசத்தை அண்டி – சீறிப் பாய்ந்து பறக்கின்றன. அவற்றின் திடீர் மிகையொலி சத்தத்தால் வெள்ளவத்தையே அதிர்கின்றது. ஏதும் அரசியல் நெருக்கடி நிலைமை ஏற்பட்டு விட்டதோ...? இந்திய யுத்த விமானங்கள் கொழும்பில் வட்டமிடுகின்றனவே"* – என்று பதறினார் அவர்.

நான் அவரை ஆசுவாசப்படுத்தினேன். *"அப்படி ஒன்றுமில்லை"* என்று கூறி நிலைமையை விளங்கப்படுத்தினேன்.

*"இலங்கை விமானப் படை ஸ்தாபிக்கப்பட்டு இது எழுபதாவது வருடம் (1951 – 2021). அதையொட்டி இலங்கை விமானப்படை, இந்திய விமானப் படையுடன் சேர்ந்து விமானப் பறப்பு வான் கண்காட்சி நிகழ்வுகளை நடத்துகின்றது. நாளை மறுதினம் புதன்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை (3ஆம் திகதி முதல் 5ஆம் திகதி வரை) தினசரி மாலை 5 மணி தொடக்கம் காலிமுகத் திடலில் போய் நின்று இந்த வான் சகாசக் காட்சிகளை நீங்கள் பார்க்கலாம். அதற்காக ஒத்திகை, வான் பாதைகள் நோட்டம் போன்றவை நடக்கின்றன போலும்...!"* – என்றேன் நான்.

அவருக்கு சப் என்றாகி விட்டது. 1987 இல் இந்திய விமானப் படையின் யுத்த விமானங்கள், அச்சமயம் இலங்கை அரசுப் படைகளின் முற்றுகைக்குள்ளும் இலங்கை அரசின் பொருளாதாரத் தடைக்குள்ளும், சிக்குண்டிருந்த யாழ்.மக்களுக்கு நிவாரணப் பொருள்களை பரசூட்டில் வீசிச் சென்ற காட்சியை எங்களுடன் சேர்ந்து பார்த்துக் கொண்டிருந்த மூத்த நண்பர் அவர். அப்படி ஏதோ என்ற நப்பாசையுடன் அடித்துப் பதைத்து எனக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்தவருக்கு நான் சொன்ன விளக்கம் நிச்சயம் சப் என்றுதான் இருந்திருக்கும்...!

★ ★ ★

யாழ்ப்பாணத்தில் பல மில்லியன் – சில சமயம் கோடிகளையும் தாண்டி – ரூபாய்களை கோட்டை விட்ட நமது வர்த்தகப் பிரமுகர்கள், பண முதலைகள் 'திருடனுக்குத் தேள் கொட்டிய மாதிரி'ப் பம்மிக் கொண்டிருக்கின்றனர் என்றால் நம்புவீர்களா?

இது முற்றிலும் – நூறு வீதம் –உண்மைத் தகவல். மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் அவர்களில் பலர் தவிக்கின்றனர். இது குறித்து அதிகம் பேசி, பரபரப்பை ஏற்படுத்தி, தம்பட்டம் அடித்து விட்டால், தாங்கள் பறிகொடுத்த தொகையை இன்னொருவர் தலையில் கட்டிவிட்டு நழுவிக் கொள்ளும் சந்தர்ப்பமும் அடிபட்டுப் போய் விடும் என்பதும் இது குறித்து வெளியில் குய்யோ, முறையோ என்று அவர்கள் குளறிக் கூப்பாடு போடாதமைக்கு ஒரு காரணமாகும்.

'பிட் கொயின்' என்ற பணப் பரிமாற்ற முறை வர்த்தகம்தான் அது. டொலரின் பெறுமதியைக் குறித்து இணையத்தில் இயங்கும் ஒரு வர்த்தகமுறைமை இது. இலங்கையில் சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்டதல்ல. டொலருக்கு எதிரான பெறுமதியில் 'பிட் கொயின்'களை இணையத்தில் உங்கள் கணக்கில் வரவு வைக்கலாம். தேவையான சமயத்தில் கூடிய விலைக்கு விற்கலாம். அவசரம் என்றால் குறைந்த விலையில் வேறு யாருக்கும் அதை வழங்கலாம். அந்த 'பிஸ்னெஸ்'யை புரிந்து கொள்வதோ,எழுத்தில் புரிய வைப்பதோ கூட சிரமம்தான்.

இப்போது அந்த வர்த்தகம் திடீரென முறிந்த நிலைமை. இணையக் கம்பனியை வளைத்துப் பிடித்து போட்ட முதலை எடுக்க முடியாத சர்வதேச இக்கட்டு.

வடக்கில் மட்டும் பல டசின் கணக்கானோர் கோடிகளுக்கு மேல் அதற்குள் தொலைத்து விட்டு, பெறுமதியில்லாத 'பிட்கொயின்' கணக்கை இணையத்தில் வைத்துக் கொண்டு காசாக்க முடியாமல் அல்லாடுகின்றனர்.

குறைந்த காலத்தில் பணம் இரட்டிப்பு மடங்காகும், மூன்று மடங்காகும் என்ற நப்பாசையில் வீட்டில் இருந்த நகைகளை எல்லாம் சுருட்டி அள்ளி அடகு வைத்து – ஒரு கோடி ரூபாவுக்கு மேல் – இதில் முதலிட்டு விட்டு முழுசிக் கொண்டிருக்கும் ஒருவர் குறித்து அறிந்திருக்கின்றேன்.

பரம்பரை பரம்பரையாக உலகுக்கே சாத்திரம் சொன்ன குடும்பத்தைச் சேர்ந்த – சுமாரான தொழிலதிபரான – ஒருவர் கூட ஒரு கோடி ரூபாவுக்கு மேல் இதில் பணத்தை விட்டு, விட்டு, தமது கோள், கிரகப்படி அது திரும்பவரும் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கின்றார். இதில் வேடிக்கை என்னவென்றால், தமது கிரக நிலை குறித்து அவருக்கு அதிகம் நம்பிக்கை போலும். ஏனென்றால் 'பிட்கொயின்' பரிவர்த்தனையே அடிபட்டு முடங்கிப் போய் விட்டது என்பது பலருக்கும் புரியத் தொடங்கிய பின்னரே – சுமார் பத்து நாள்களுக்கும் முன்னரும் – யாரோ ஒருவர் பெயரில் இருந்த ஒரு லட்சம் ரூபாவுக்கு அதிக தொகையை நல்ல வீதத்தில் – அடிமாட்டு விலைக்கு – கிடைக்கின்றது என்ற மகிழ்வோடு – அவர் வாங்கிக் குவித்திருக்கின்றார். அவ்வளவு தூரம் தமது முதலீட்டைத் திரும்பப் பெறலாம் என்ற முழு நம்பிக்கை அவருக்கு.

யாழ்ப்பாணத்தின் பிரபல வர்த்தகப் புள்ளிகள், முக்கிய சட்டத்தரணி ஒருவர், ஐயர் ஒருவர் எனப் பலர் 'பிட் கொயின்' திட்டத்தில் மூன்றாம் நபருக்குத் தெரியாமல் – சத்தம் சந்தடியின்றி – முதலிட்டு விட்டு, வெறுங் கையை முழம் போட்டுக் கொண்டு காத்துக் கிடக்கின்றார்கள். நம்மில் பலர் படித்த மேதாவிகள்தாம்...!

– மின்னல் –

## ஏழு வயது சிறுவன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

திருட்டுப் போயுள்ளது. அதனால் தனது சிறிய தந்தை மாட்டைத் திருடி விட்டு தப்பித்துள்ளார் எனக் கருதி உடன்பிறவாச் சகோதரர்கள் மூவரையும் 17 வயதுடைய ஒன்றுவிட்ட சகோதரன் கடுமையாகத் தாக்கியுள்ளார்.

அதில் கடந்த 22ஆம் திகதி 7 வயது உடன் பிறவாச் சகோதரனை ஆள்கள் அற்ற வீட்டுக்கு அழைத்துச் சென்று மாட்டைக் கேட்டு அவர் தாக்கியுள்ளார்.

அதனால் தாக்குதலுக்குள்ளான சிறுவன் சுயநினைவற்று நிலத்தில் சுருண்டு வீழ்ந்துள்ளார். இவ்வாறு வீழ்ந்த சிறுவனை அந்த இடத்தில் கைவிட்டு ஒன்றுவிட்ட சகோதரன் வீடு திரும்பியுள்ளார்.

இதையடுத்து சிறுவனை உறவினர்கள் தேடிச் சென்றபோது அவர் நிலத்தில் சுயநினைவற்று கிடந்துள்ளார். அவர் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் உறவினர்களால் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும், 5 நாள்கள் தொடர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் சிறுவன் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த சிறுவனின் மரண விசாரணையை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை திடீர் இறப்பு விசாணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்ட நிலையில் உடற்கூற்றுப் பரிசோதனையில் சிறுவன் கூரிய ஆயுதத்தால் தலையில் தாக்கப்பட்டதால் மூளையில் ஏற்பட்ட குருதிக் கசிவால் உயிரிழந்தார் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வரும் கிளிநொச்சிப் பொலிஸார், கொலைவெறித் தாக்குதலை மேற்கொண்ட 17 வயது இளைஞரைத் தேடி வரும் நிலையில் அவரும் தலைமறைவாகியுள்ளார்.

## இந்தியாவைப் பகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ராஜபக்ஷ அரசின் கனவு நரகலோகக் கனவாகவே இருக்கும். இவ்வாறான செயற்பாடுகளால் எந்தவித நன்மைகளையும் இலங்கை அடையமாட்டாது. மிகவும் அயல் நாடான இந்தியாவைப் பகைப்பதால் பெரும் விளைவுகளைத்தான் இலங்கை சந்திக்கும் என்பதை இந்த அரசிடம் கூறிவைக்க விரும்புகின்றேன்.

அயல் நாடுகளுடன் நட்புறவை சமாந்தரமான முறையில் வைத்திருக்க வேண்டும். ஒரு நாட்டைப் பகைத்துவிட்டு மற்றைய நாட்டை மடியில் தூக்கி வைத்துக் கொண்டாடுவதில் எந்த இலாபமும் கிடைக்காது. எமது நாடுதான் அடகுவைக்கப்படும்.

ஏற்கனவே இலங்கையைச் சீனா ஆக்கிரமித்து நாட்டை நாசமாக்கி வருகின்றது. அந்தளவுக்கு இந்த அரசு இடம் கொடுத்துவிட்டது – என்றார்.

## எத்தனை பிரேரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மாற்றம் எதையும் செய்யவேமாட்டோம்.

– இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது அமர்வு நடைபெற்று வருகின்றது. இலங்கை தொடர்பான புதிய பிரேரணை விவகாரமும் சூடுபிடித்துள்ளது. வாக்குரிமையுள்ள 10 நாடுகள் மட்டும் இதுவரை இலங்கைக்கு ஆதரவாகக் கருத்து வெளியிட்டுள்ளன. இந்தநிலையில் இது தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் ஊடகவியலாளர்கள் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக வெளிநாடுகள் எத்தனை பிரேரணைகளையும் கொண்டுவரலாம். அவை நிறைவேறினால் என்ன, நிறைவேறா விட்டால் என்ன எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. இம்முறை பிரேரணையைத் தோற்கடிக்க வேண்டும் என்பதில் எமது நட்பு நாடுகள் உறுதியாக உள்ளன. இறுதியில் என்ன நடந்தாலும் எமது அரசின் வெளிநாட்டுக் கொள்கை நிலைப்பாட்டில் நாம் மாற்றம் எதையும் செய்யவேமாட்டோம். எமது புதிய அரசு பதவியேற்ற கையுடன் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ஆற்றிய 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற கொள்கை விளக்க உரையில் அரசின் நிலைப்பாடுகளை தெளிவாக வெளியுலகத்துக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சரும் தற்போது ஜெனிவாக் கூட்டத்தொடரில் இலங்கையின் நிலைப்பாட்டை எடுத்தியம்பியுள்ளார். எனவே, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் மிரட்டல்களுக்கும், அவருக்கு ஆதரவாக இருக்கும் சில நாடுகளின் கூட்டிணைவால் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள பிரேரணைக்கும் நாம் அஞ்சவும் மாட்டோம்; அடிபணியவும் மாட்டோம் – என்றார்.

## ஈஸ்டர் தாக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அழைப்பு விடுத்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்த மற்றும் உறவுகளை இழந்த அனைத்துத் தரப்பினருக்கும் நீதி கோரும் போராட்டமாகக் கறுப்பு ஞாயிறு தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தினத்தில் கத்தோலிக்க மக்கள் கறுப்பு நிறத்தில் உடை அணிந்து விசேட பிரார்த்தனைகளில் கலந்துகொள்ளும் படியும் பேராயர் கேட்டுக்கொண்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை வெளியிடப்பட்டுள்ள நிலையில் குறித்த அறிக்கை பல தரப்பினராலும் நிராகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கு, கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவும், கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனும் களமிறங்கவுள்ளனர் என்று நேற்று சில ஊடகங்களில் செய்திகள் வெளிவந்திருந்தன.

இந்தச் செய்தியை உறுதிப்படுத்தும் வகையில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனைத் தொடர்புகொண்டு வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் மாகாண சபைகளுக்கான தேர்தல் விரைந்து நடத்தப்பட வேண்டும் என்பது இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் கோரிக்கையாகும். எமது விருப்பமும் அதுவே ஆகும்.

எனினும், மாகாண சபைத் தேர்தலைப் பழைய முறைமையில் நடத்துவதா அல்லது புதிய முறைமையில் நடத்துவதா என்பது தொடர்பில் அரசுக்குள் இரு வேறுபட்ட நிலைப்பாடுகள் உள்ளன.

அதேவேளை, மாகாண சபை முறைமையை இல்லாதொழிக்க வேண்டும் என்றும் அரசுக்குள் இருக்கும் சிலர் கங்கணம் கட்டிச் செயற்பட்டுக்கொண்டு வருகின்றனர்.

எது நடந்தாலும் மாகாண சபை முறைமையை இல்லாதொழிக்க நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். இந்தியாவும் அதை விரும்பாது.

மாகாண சபைகளுக்கான தேர்தலைக் காலம் தாழ்த்தாது உடனே நடத்த வேண்டும் என்று அண்மையில் இலங்கை வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஜனாதிபதி தலைமையிலான அரசிடம் எடுத்துரைத்திருந்தார்.

எனவே, மாகாண சபைத் தேர்தலை பழைய முறைமையிலோ அல்லது புதிய முறைமையிலோ அரசு நடத்தியேக ஆகவேண்டும்.

ஆனால், மாகாண சபைகளுக்கான தேர்தல் தொடர்பில் அரசு இன்னமும் உத்தியோகபூர்வ அறிவிப்பு எதையும் விடுக்கவில்லை.

இந்தநிலையில், வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர்கள் தொடர்பில் இப்போதைக்கு நான் அலட்டிக்கொள்ள விரும்பவில்லை. முதலமைச்சர் வேட்பாளர்கள் குறித்து உரிய நேரத்தில் தீர்க்கமான முடிவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்கும் – என்றார்.

## சாதாரண தரப் பரீட்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பரீட்சார்த்திகள் என்றே இந்த 44 ஆயிரத்து 245 மாணவர்களும் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

இவ்வாறு தோற்றும் 44 ஆயிரத்து 245 மாணவர்களில் 23 ஆயிரத்து 679 பாடசாலைப் பரீட்சார்த்திகளும், 20 ஆயிரத்து 566 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றுகின்றனர்.

இவர்களில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து 11 ஆயிரத்து 352 பாடசாலைப் பரீட்சார்த்திகளும், 11 ஆயிரத்து 130 தனிப்பட்ட பரீட்சார்த்திகளுமாக 22 ஆயிரத்து 482 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றுகின்றனர். கிளிநொச்சி மாவட்டத்தில் 3 ஆயிரத்து 392 பாடசாலைப் பரீட்சார்த்திகளும், 2 ஆயிரத்து 74 தனிப்பட்ட பரீட்சார்த்திகளுமாக 5 ஆயிரத்து 466 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றுகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 919 பாடசாலைப் பரீட்சார்த்திகளும், ஆயிரத்து 855 தனிப்பட்ட பரீட்சார்த்திகளுமாக 4 ஆயிரத்து 774 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றுகின்றனர். வவுனியா மாவட்டத்தில் 3 ஆயிரத்து 771 பாடசாலைப் பரீட்சார்த்திகளும், 2 ஆயிரத்து 860 தனிப்பட்ட பரீட்சார்த்திகளுமாக 6 ஆயிரத்து 631 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். அதேவேளை மன்னார் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 245 பாடசாலைப் பரீட்சார்த்திகளும், 2 ஆயிரத்து 647 தனிப்பட்ட பரீட்சார்த்திகளுமாக 4 ஆயிரத்து 892 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றுகின்றுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# தனிநபருக்கு முதலமைச்சர் பதவியை பெற்றுக்கொடுக்க விரிக்கப்படுகின்ற வலைக்குள் மதத் தலைவர்கள் வீழ்வதா?

## ஆக்ரோஷப்படுகின்றார் ஆனந்தசங்கரி



இந்த அரசியல் பிரமுகர்களின் வலைக்குள் மதத்தலைவர்களை விழுந்து விட வேண்டாம் எனக் கோரியிருக்கின்றார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி.

இது தொடர்பாக அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு:-

தமிழ்த் தேசியப் பரப்பில் இருந்து செயற்படுவதாக கூறிக்கொள்ளும் அரசியல் கட்சிகளும், மதத்தலைவர்களும், சிவில் அமைப்பின் பிரதிநிதிகளும் வவுனியாவில் ஒன்று கூடி கலந்துரையாடல் மேற்கொண்டனர் என ஊடகங்களில் வந்த செய்தி எனக்கு வியப்பை ஏற்படுத்தியது. மதத் தலைவர்கள் எல்லோரும் ஒன்று கூடி இதற்கு ஆதரவு தெரிவித்தமை ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று.

ஆன்மீக ரீதியில் செயற்படும் மதத் தலைவர்கள் இந்த அரசியல் பிரமுகர்களின் வலைக்குள் விழுந்துவிட்டார்கள் என்றே எண்ணத்தோன்றுகின்றது.

2004 ஆம் ஆண்டு மதத்தலைவர்கள் எல்லோரும் ஒன்று கூடி அன்று நடந்த ஜனநாயக விரோத செயலை கண்டிக்காதமை ஏன்? 2004 ஆம் ஆண்டு மாவை சேனாதிராசாவிற்கு ஒரு கட்சியும் தலைவர் பதவியும் தேவைப்பட்டது. அந்த நேரத்தில் விடுதலைப்புலிகளைப் பயன்படுத்தி அதனைப் பெற்றுக்கொண்டார். விடுதலைப்புலிகளின் முழு ஒத்துழைப்புடன் தேர்தல் ஜனநாயக விதிமுறைகளை முற்று முழுதாக மீறி, ஜனநாயகத்தை குழி தோண்டி புதைத்தவர்கள் இன்று வெவ்வேறு கட்சிகளாக பிரிந்து ஒரு புதிய கட்டமைப்பை உருவாக்குவதற்கு மதத்தலைவர்களை பயன்படுத்துவதை நான் வன்மையாக கண்டிக்கின்றேன். அந்த அரசியல் கட்சியில் உள்ள எவருக்கும் ஜனநாயகத்தைப்பற்றி பேசும் அருகதை இல்லை. முழுக்க முழுக்க ஜனநாயகத்தை குழி தோண்டி புதைத்து விட்டு, 2004 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்து செயற்பட்டவர்களின் அணியே அது. பதவியை கொடுத்த அதே விடுதலைப் புலிகளை கூண்டோடு அழித்ததாக கூறிய சரத்பொன்சேகாவை ஜனாதிபதித் தேர்தலில் ஆதரித்து நன்றியை தெரிவித்துக் கொண்டார்கள்.

யுத்தம் முடிந்த பின்னராவது இவ்வாறு ஒரு கட்டமைப்பை உருவாக்கி செயற்படவில்லை. 2010 ஆம் ஆண்டு தேர்தலுக்கு பின்பு இவ்வாறு ஒரு கட்டமைப்பை உருவாக்கவில்லை அது ஏன்? எல்லாவற்றிற்கும் மேலாக 2015 ஆம் ஆண்டு தேசிய அரசாங்கம் என்ற போர்வையில் நல்லிணக்க ஆட்சிக் காலத்தில், மதத்தலைவர்களை அழைத்து இவ்வாறானதொரு கட்டமைப்பை உருவாக்கியிருந்தால், வெகு இலகுவாக எமது மக்களின் பிரச்சினைகளை தீர்த்திருக்கலாம். ஏன் அவ்வாறு செய்யவில்லை? அந்த நேரத்தில் பதவி மோகம் கொண்ட ஒரு சிலருக்கு எதிரக் கட்சித் தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி சுகம் கிடைத்த படியால் ஒரு கட்டமைப்பு தேவை ஏற்படவில்லை.

2020 ஆம் ஆண்டு மாவை. சேனாதிராசா அவர்களின் பதவி பறிபோய்விட்டது. மீண்டும் முதலமைச்சர் பதவிக்கு வருவதற்கு ஒரு கட்டமைப்பு தேவைப்படுகிறது. அதனால் மதத்தலைவர்களின் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. இந்த நபர்களுக்கு மதத்தலைவர்கள் ஒத்துழைப்பு கொடுத்தால் தமிழ் மக்களுக்கான அரசியல் வாதிகளின் வரலாற்றுத் தவறுகளில் இதுவும் ஒன்றாக அமைந்துவிடும்.

2015 இல் சரி பிழைக்கு அப்பால் அமைந்த தேசிய அரசாங்கத்தால் எதிர்க் கட்சித் தலைவர் பதவியை வைத்துக் கொண்டு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கோ, ஐ.நா.சபை மனித உரிமை மீறல்களுக்கான விடயங்களுக்கோ, இவ்வாறான மதத்தலைவர்களை உள்ளடக்கிய ஒரு கட்டமைப்பை உருவாக்கி இருந்தால், தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பல பிரச்சினைகளில் மிக முக்கியமான ஒரு சில பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வை கண்டிருக்கலாம். அதை எல்லாம் விடுத்து ஒரு தனிநபருக்கு முதலமைச்சர் பதவியை பெற்றுக்கொடுப்பதற்காக உருவாக்கப்படும் இந்த கட்டமைப்பின் வலைக்குள் வீழ்ந்துவிட வேண்டாம் என, வணக்கத்திற்குரிய மதத்தலைவர்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

2004 ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சி 22 ஆசனங்களைப் பெற்ற மர்மம் இன்று வரை எவராலும் வெளிக்கொண்டுவரப் படவில்லை. அது ஏன், எதற்காக என்பதையும் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். - என்று உள்ளது.

# இலங்கைக்கு எதிரான நடவடிக்கை: ஐரோப்பிய ஒன்றியமும் பேராதரவு!



கொழும்பு, மார்ச். 01

இலங்கையின் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்காக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் ஆதரவு தெரிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது அமர்வில் அறிக்கையொன்றை வெளியிட்டு, ஐரோப்பிய ஒன்றியம் இதனைத் தெரிவித்துள்ளது.

சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மனித உரிமை பாதுகாவலர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் மீதான அரசின் தீவிர கண்காணிப்பு மற்றும் அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளன எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு, இலங்கையின் மனித உரிமை விடயங்களில் ஏற்பட்டுள்ள பின்னடைவுக்கும் ஐரோப்பிய ஒன்றியம் கவலைகளை வெளியிட்டுள்ளது. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் இழப்பீடு தொடர்பான அலுவலகங்கள் பாதுகாக்கப்பட்டு, அவற்றுக்கான வளங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் கேட்டுக்கொண்டுள்ளது.

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதில் இலங்கை அரசு முனைப்புடன் செயற்படும் என்று தாம் நம்புகிறோம் எனவும் ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# மகிழ்வூட்டி மகிழ்வோம்

இரக்கம், கருணை, தானம் செய்வதில் எமது மன நிலை எப்படி உள்ளது பிறர் எமக்கு அன்பளிப்பு, பரிசளிப்பு, உதவிகள் தர வேண்டும் என எதிர்பார்ப்பதும் ஏமாற்றம் அடையும் போது அவர்களுடனான தொடர்பு அற்றுப்போவதும் எமது உறவு விரிசலுக்கு காரணமாகிறது. அதே செயலை நாம் செய்ய கிடைத்த சந்தர்ப்பங்கள் எத்தனை அதனை எம்மிடம் இப்பதில் இருந்து சிறிதளவாவது கொடுத்து மகிழ்ந்தோமா? பிறர்மீது காட்டும் உதவிகளுக்கு எதிர்பார்ப்புடன் உதவி செய்வது தான் இன்று அதிகமாகி வருகிறது.

இவை சுயநலத்தின் வெளிப்பாடே எம்மை அறியாமலே குடும்பத்தில் பெற்றோரிடம் பிள்ளைகள் எதிர்பார்ப்பதும், பிள்ளைகளிடம் பெற்றோர் எதிர்பார்த்து ஏமாற்றம் பெறுவதும் எம்மை அறியாமலே நாம் செய்யும் தவறுகளாகும். எதிர்காலத்தில் அவர்களின் சொத்தை சுகத்தை எதிர்பார்த்து உதவ முற்படுவதும் ஏமாற்றமே என்பதனை இறைவார்த்தை கூறும் செய்தி இதுவே.

"கொடுங்கள். உங்களுக்கு கொடுக்கப்படும், அமுக்கி குலுக்கிச் சரிந்து விடும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள் நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால், உங்களுக்கு, அளக்கப்படும் என்பதை எமது தவக்கால தியானத்தில் செயலாக்க முயலும் மனமாற்றமே நிறைவான அருளைப்பெற முடியும்." - உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல் நீங்களும் இரக்கமுள்ளவராய் இருங்கள் என்கிறார்.

தான தர்மம் செய்யும் ஒவ்வொருவர் மனமும் பிறர் ஆசியால் நிறையும் இதில் கஞ்சல் தனமோ, பிறர் பாராட்டோ இருக்காது மறைவாக செய்யும் எதையும் இறைவன் நிறைவாகவே அருள்வார். இவை எமது ஆன்மீக செயலாக செய்யும் மனநிலை பிறருக்கு மகிழ்வூட்டி, மகிழ்வும் செயலாக கருணையுடன் இரக்கம் நிறைந்த மனநிலையுடன் தவப் பயணத்தில் தான தர்மங்கள் எமது வாழ்வில் இறை உறவை பலமாக்கி கொடுத்து மகிழ்வோம்.

# காட்டு யானைத் தாக்குதலில் வாகரையில் விவசாயி சாவு!

மட்டக்களப்பு - வாகரை பிரதேசத்தின் கதிரவெளி கட்டுமுறிவுக்குளம் பகுதியைச் சேர்ந்த விவசாயி ஒருவர் அதிகாலை காட்டு யானை தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் கட்டுமுறிவுக்குளத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 50 வயதுடைய பாக்கியராசா நாகேந்திரன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அந்தப் பகுதியில் வயல் நிலத்தை பார்வையிட இரவு 7.30 மணியளவில் கட்டுமுறிவுக்குளம் பகுதியிலுள்ள தனது வீட்டில் இருந்து புறப்பட்டு சென்றிருந்த நிலையில் இன்று அதிகாலை மூன்று மணியளவில் வயல் பகுதியில் காட்டு யானைத் தாக்குதலுக்கு இலக்காகி அவர் உயிரிழந்துள்ளார் என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பகுதியில் தொடர்ந்துகாட்டு யானைகளின் தாக்கம் காணப்பட்டு வருகின்ற போதிலும் மக்கள் வாழும் இடங்களில் மாத்திரம் யானை பாதுகாப்பு வேலி போடப்பட்டுள்ளதாகவும், அந்தப் பகுதி மக்கள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் பகுதியில் எதுவித பாதுகாப்பும் இல்லாமல் விவசாயிகள் இரவு நேர காவலில் ஈடுபட்டுள்ளமையால் இவ்வாறான உயிரிழப்புக்கள் இடம்பெறுகின்றன என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.



அந்தப் பகுதியில் இருந்து வைத்தியசாலைக்கு அவசர தேவைக்காக நோயாளிகளை இரவு நேரங்களில் கொண்டு செல்ல முடியாதவாறு பாதுகாப்பு அற்ற வீதிகளும் காட்டு யானைகளின் நடமாட்டமும் உள்ளதோடு அப்பகுதி மாணவர்கள் கல்வி செயற்பாட்டுக்காக பாடசாலைக்கு குறித்த வீதிகளினூடாக உரிய நேரத்தில் சமூகமளிக்க முடியாத நிலையும் உள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து இந்தப் பகுதியிலுள்ள பிரச்சினைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், காட்டு யானைகளின் தாக்குதலில் இருந்து விவசாயிகளையும் கிராம மக்களையும் பாதுகாக்க பாதுகாப்பான மின்சார வேலிகளை அமைத்துக் கொடுக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நமது பொறுப்பு இது!

உலகம் நீதியின் அச்சாணியில் சுழல்வதில்லை. நீதியையும் நியாயத்தையும் போதிக்கும் உலக நாடுகள் எல்லாம் நீதி தேவர்களும் அல்லர். உலக நடப்புகளைப் பற்றிய கணிப்பீடுகள் எல்லாம் நீதி தேவதையின் தராசுத் தட்டில் மதிப்பிடப்படுபவையும் அல்ல.

அது மாத்திரமல்ல, உலக நாடுகளின் பெருமன்றான ஐக்கிய நாடுகள் சபையாக இருக்கட்டும், உலக நாடுகளில் மனித உரிமைகளை நிலைநிறுத்த உருவாக்கப்பட்டதாகக் கூறப்படும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலாகட்டும், எதுவுமே நீதிமன்றங்களும் அல்ல.

மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், இனச்சுத்திகரிப்பு, இனவழிப்புக் கோரங்கள் பற்றி எல்லாம் அங்கு பேசப்பட்டாலும் – விவாதிக்கப்பட்டாலும் – முடிவு செய்யப்பட்டாலும் – நீதி, நியாயங்கள் பற்றி அந்த மன்றங்களில் உரக்கக் குரல் எழுப்பப்பட்டாலும் – அங்கு வழங்கப்படுவது நீதித் தீர்ப்புமல்ல, நியாய முடிவும் அல்ல. அவை நீதித் தீர்ப்பாயங்களும் அல்ல.

மாறாக, அவற்றின் பெயரால் அங்கத்துவ நாடுகள் நடத்தும். அந்நாடுகளின் பூகோள நலன்சார்ந்த நாடகங்களே அங்கு அரங்கேறுகின்றன.

அவற்றுக்கு இடையேதான் எங்கள் காரியங்களை நாம் சாதித்து எமக்குரிய நீதியைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

சர்வதேச அரசியல் ஊடாட்டத்தின் ஊடாக நீதியைப் பெற முனையும் – ஒரு நாட்டு அரசுத் தரப்பு அல்லாத – எமது தமிழினத்தைப் போன்ற பக்கத்தினர், இந்த யதார்த்தப் புறநிலையைப் புரிந்து கொண்டுதான் இத்தகைய முறைமை ஊடாக தங்களுக்கு உரியதை – சில சமயம் அது நீதி, நியாயமாகவும் இருக்கலாம் – பெற விழையவும், முனையவும் வேண்டும்.

இந்த யதார்த்தப் புரிதல் இல்லாமல் இத்தகைய விடயத்தை அணுகுவது நம்மை நாமே முட்டாளாக்கும் செயலாகிவிடும்.

ஜெனிவாவில் இப்போது நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடரும் இத்தகையதுதான்.

எங்கள் பக்கம் நீதி இருக்கலாம்; நியாயம் இருக்கலாம்; எங்களுக்கு இழைக்கப்பட்டது முழுக் கொடூரமாகவும், அநீதியாகவும் – ஏன் இனவழிப்பாகவும் – இருக்கட்டும். அதுதான் உண்மையும் கூட. ஆனால் அதற்கு நீதி சொல்லும் தீர்ப்பாயம் அல்ல ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில்.

தவறிழைத்த தரப்பு ஒரு பக்கமாகவும், தவறுகளை எதிர்கொண்டு அனுபவித்த – அல்லது பாதிக்கப்பட்ட – தரப்பு இன்னொரு பக்கமாகவும் இருக்கும் போது, நீதி, நியாயம் எந்தத் தரப்பின் பக்கம் உள்ளது என்று தீர்மானிப்பதிலும் விட, தரப்புகளில் எது எங்கள் அணியைச் சார்ந்தது என்பதைத்தான் நாடுகள் நோக்குகின்றன.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தமிழருக்கு இழைக்கப்பட்ட கொடூரங்கள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான நடவடிக்கைகள் போன்றவை மிக மோசமானவைதான். அதை, அந்த உண்மையை, முன்னிறுத்துவதை மட்டும் நம்பி – உண்மையை, நீதி, நியாயத்தையும் மட்டும் எங்கள் தரப்பின் பலமாக வைத்து – நாம் ஜெனிவாவில் எங்கள் பக்கத்தை முன் நகர்த்த முடியாது; நீதியைப் பெறமுடியாது.

சந்தர்ப்பவசமாக எங்களுக்காகக் குரல் எழுப்ப முற்பட்டிருக்கின்ற தரப்புகள் மேற்குலகின் வலிமையான சக்திகள். பிரிட்டன், கனடா, ஜேர்மனி மற்றும் அமெரிக்கா போன்றவை. அவை கூட எங்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற ஒரு நியாயத்தின் அடிப்படையில்தான் இந்த விடயத்தைத் தூக்கிப் பிடிக்கின்றனவா என்பதும் கூடக் கேள்விக் குறியே.

எங்களுக்காகக் குரல் எழுப்பப் போய் தாங்களாக சர்வதேச அரங்கில் மூக்குடைபட்டுப் போகவும் அவை தயாரில்லை.

அங்கத்துவ நாடுகளின் எண்ணப் போக்கில்தான் – அவை அணி சேரும் தரப்புகளின் எண்ணிக்கை பற்றிய அட்சர கணிதத்தில்தான் – விவகாரம் தீர்மானிக்கப்படுமே தவிர, எமக்கான நீதியில் மட்டும் தங்கியல்ல என்பதை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நாடுகளின் புவியியல், அரசியல், கொள்கை கோட்பாட்டின் சூத்திரத்தில் அடிப்படையிலும் இது தீர்மானிக்கப்படும் என்பதையும் மறக்கக் கூடாது.

எமக்கு இழைக்கப்பட்ட கொடூரங்களுக்கு எப்படி நீதி செய்வது – சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு இவ்விடயத்தைப் பாரப்படுத்துவதன் மூலமா அல்லது வேறு வழிகளிலா என்பது – நீதி, நியாயத்தின்படி அங்கு தீர்மானிக்கப்படப் போவதில்லை. நாடுகள் அணி சேரும் எண்ணிக்கை, நாடுகளின் நலன்கள், உறவுகள், ஊடாட்டங்களின் அடிப்படையில்தான் அது தீர்மானிக்கப்படும்.

எங்களுக்காகக் குரல் எழுப்பி, நியாயம், தேட முயன்றுள்ள நாடுகள், எங்கள் தொடர்பான பிரேரணையில் அவை மூக்குடைபடாமல் சாதுரியமாக விடயங்களை சாதிப்பதற்கு இடமும், வசதியும், வாய்ப்பும் அளித்து, இசைந்து செயற்படுவதே நமது பொறுப்பான கடமையாகும்.

ஆரவாரம் பண்ணும் தரப்புகளுக்கு யதார்த்தப் புறநிலைமை பற்றிய இந்த உண்மை சமர்ப்பணம்.

# டோஸரை இயங்க வைத்த சிறுவர்களின் பெற்றோர் தலையில் நஷ்டப் பொறுப்பு!

## சுன்னாகம் சம்பவம் குறித்து பணிப்பு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்.01

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் வீதியோரம் தரித்து நின்ற டோஸர் வாகனத்தில் ஏறி விளையாடி, டோஸர் நகர்ந்து சேதம் விளைவிக்கக் காரணமாகவிருந்த சிறுவர்களின் பெற்றோரே இந்தச் சம்பவத்தில் ஏற்பட்ட சேதத்தைச் சீர் செய்ய வேண்டும் என சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் உள்ள ஒரு சிறு வீதியை அமைக்கும் நோக்கில் ஒரு டோஸர் வாகனம் கடந்த 10 நாள்களாக நிறுத்தப்பட்டிருந்தது. அந்த வாகனத்தில் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் சிறுவர்கள் சிலர் ஏறி விளையாடியுள்ளனர். இதன்போது திடீரென வாகனம் இயங்கியுள்ளது.

இதனால் அச்சிறுவர்கள் எடுத்து வந்த துவிச்சக்கர வண்டிக்கு மேலால் ஏறியவாறு டோஸர் வீதியால் பயணித்து சேதங்கள் ஏற்பட்டன.

அதனை நிறுத்தத் தெரியாத சிறுவர்கள் அவலக் குரல் எழுப்பிய சமயம் வீதியோரம் ஒரு வீட்டின் தூண் வேலிகளைத் தகர்த்துக் கொண்டு நகர்ந்த டோஸர் வளவில் இருந்த தோட்டத்தின் ஊடாக வேலிகளைப் பிய்த்துக் கொண்டு தொடர்ந்தும் முன்னேறியது.

சாரதியின்றி தனித்து இயங்கிய டோஸர் ஒரு வீட்டின் வளவில் நின்ற தென்னையுடன் மோதிய சமயம் வீதியால் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் ஓடிவந்து டோஸரில் ஏறி வாகனத்தை நிறுத்தியமையினால் தெய்வாதீனமாக மேலதிக சேதங்கள், உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டன.

இந்த விபத்துக்கள் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாரிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து டோஸர் உரிமையாளர், காணி உரிமையாளர் மற்றும் டோஸரில் ஏறிய சிறுவர்கள் அனைவரையும் சுன்னாகம் பொலிஸிற்கு அழைத்து அவர்கள் விசாரித்தனர். சிறுவர்கள் செய்த தவறின் காரணமாகவே இந்தச் சம்பவம் ஏற்பட்டதனால் சிறுவர்களின் பெற்றோரே நஷ்டத்தைச் சீர் செய்ய வேண்டும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# தடுப்பூசி போட்டவர்களும் தொடர்ந்து விதிமுறைகளைப் பின்பற்றவே வேண்டும்

## தொற்றுநோய் ஆய்வு அதிகாரி வலியுறுத்து



கொவிட் தடுப்பூசியால் மாத்திரம் கொரோனா வைரஸிலிருந்து முழுமையாக பாதுகாப்பு பெற முடியும் என்பதற்கு எந்த ஆதாரமும் இதுவரை உலகில் முன்வைக்கப்படவில்லை. தடுப்பூசி போட்டுக் கொண்டவர்கள் மற்றும் தடுப்பூசி போடாத அனைவரும் தொடர்ந்து சுகாதார நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டுமென தொற்று நோய் ஆய்வு பிரிவின் பிரதானி விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தடுப்பூசியால் மாத்திரம் கொவிட்19 வைரஸிலிருந்து முழுமையாகப் பாதுகாப்பு பெறமுடியும் என்பதற்கு எந்த ஆதாரமும் உலகில் முன்வைக்கப்படவில்லை.

தடுப்பூசி போட்டுக் கொண்டவர்கள் மற்றும் தடுப்பூசி போடாத அனைவரும் தொடர்ந்து சுகாதார நடவடிக்கைகளை பின்பற்றுவது கட்டாயமாகும்.

கொவிட்19 தடுப்பூசியை பெற்றுக்கொள்ள மது அல்லது புகைபிடிக்கும் பழக்கம் ஒரு தடையாக இருப்பதாக உலக சுகாதார நிறுவனமோ அல்லது தடுப்பூசியை தயாரித்த ஆராய்ச்சி நிறுவனங்களோ எவ்வித கருத்தும் தெரிவிக்கவில்லை. - என்றார்.

# ஆசிரியர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படும்

## ஜனாதிபதி உத்தரவு



திருகோணமலை, மார்ச்.01

நீண்ட காலமாகப் பாடசாலைகளில் நிலவும் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் கணினி தொழில்நுட்ப ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்ப உடனடியாக விண்ணப்பங்களை கோருமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கல்வி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில், கோமரன்கடவல பிரதேச செயலக பிரிவின் கிவுலேகடவல கிராம சேவகர் பிரிவில் உள்ள கிவுலேகடவல வித்தியாலய வளாகத்தில் இடம்பெற்ற 'கிராமத்துடன் உரையாடல்' 12 ஆவது நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றியபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்

அதன்படி, நியமனம் வழங்கப்பட்ட அதே பாடசாலையில் எட்டு வருட சேவையின் அடிப்படையில் சில பாடங்களுக்கான வெற்றிடங்களுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நாட்டின் அனைத்து பாடசாலைகளிலும் காணப்படும் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் மற்றும் கணினி தொழில்நுட்பம் உள்ளிட்ட பாடங்களின் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்ப அடுத்த வாரம் விண்ணப்பங்களை கோர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இதேநேரம், திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பிரிவெனாவிற்கும் 05 கணினிகள் வீதம் வழங்கவும் நாட்டின் அனைத்து பிரிவெனாக் கல்லூரி மாணவர்களுக்கும் விளையாட்டு மைதானங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

# பத்தாயிரம் வடமாகாணக் கடற்றொழிலாளர்களுடன் இந்தியாவுக்கு நேரில் சென்றேனும் பேசித் தீர்ப்பேன்

## மீனவர் பிரச்சினை தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் உறுதி



இந்திய மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணாவிட்டால் இங்கிருந்து கதைப்பதை விட, பத்தாயிரம் வடமாகாண கடற்தொழிலாளர்களுடன் இந்தியாவுக்குப் படகில் சென்று, அந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு யோசித்துக் கொண்டிருக்கின்றேன் என கடற்தொழில் நீரியல்வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்

முல்லைத்தீவில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர் -

இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு நிறுத்தப்பட வேண்டும். இந்திய மீனவர்களுடனான பேச்சு வருவது போவதாக உள்ளது. தீர்வு என்று எதுவும் இல்லாவிட்டாலும் இந்திய மீனவர்களின் வருகை நிரந்தரமாக காணப்படுவதாக கடற்தொழிலாளர்கள் என்னிடம் முறையிட்டுள்ளார்கள்.

இதனைத் தீர்த்து தராவிட்டால் ஆர்ப்பாட்டம், தொழில்முடக்கம், அமைச்சரின் வடமாகாண நடமாட்டத்தினை முடக்குவோம் என்றெல்லாம் சொல்லிக்கொண்டு இருக்கின்றார்கள். நான் பொறுமை பொறுமை என்று சொல்லிக் கொண்டிருக்கின்றேன். இருந்தாலும் அது நியாயமான கோரிக்கை. இதனை நான் விரைவில் தீர்க்க முயற்சிப்பேன்.

பத்தாயிரம் கடற்தொழிலாளர்களுடன் இந்தியாவுக்குச் சென்று, அங்குள்ள கடற்தொழிலாளர்களுடனும் ஆட்சியாளர்களுடனும் கதைப்பேன் என நான் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் சொல்லியிருந்தேன்.

இந்த பிரச்சினைக்கு தீர்வு காணாவிட்டால் இங்கிருந்து கதைப்பதை விட பத்தாயிரம் வடமாகாண கடற்தொழிலாளர்களுடன் இந்தியாவுக்குப் படகில் சென்று அந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு யோசித்துக்கொண்டிருக்கின்றேன். - என்றும் அவர் தெரிவித்தார்.

# இளம் சுகாதாரப் பரிசோதகரது உயிரைப் பறித்த கொரோனா!

கொரோனா வைரஸ் தொற்றுப் பரம்பலைக் கட்டுப்படுத்தும் செயற்பாட்டில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வந்திருந்த இளம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்துள்ளார்.

களுத்துறை மாவட்டம், பேருவளை பொதுச்சுகாதாரப்பரிசோதகராகக் கடமையாற்றி வந்த ருசித பண்டார என்ற இளைஞரே கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்துள்ளார்.

கொரோனாத் தொற்று பரம்பலுக்கு எதிரான செயற்பாட்டில் இரவு, பகல் பாராது அர்ப்பணிப்புடன் செயலாற்றி வந்த குறித்த இளம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கொரோனாவுக்கே பலியாகியுள்ளமை அவர் கடமையாற்றிய பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# தடையின்றி மின்சாரம் வழங்குவதில் சிக்கல்!

நீர் மின் உற்பத்தி படிப்படியாக வீழ்ச்சியடைந்து வருகின்றமையால் தடையின்றி மின்சாரம் வழங்குவதில் சிக்கல்கள் காணப்படுகின்றன என மின் மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

வறண்ட வானிலை காரணமாக 74 வீதம் மின்சார உற்பத்தியை நிலக்கரி, டீசல் மற்றும் வெப்பம் ஆகியவற்றின் ஊடாகவே பெற வேண்டிய நிலைமை காணப்படுகின்றது எனவும் அந்த அமைச்சகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, இந்த நாள்களில், மொத்த மின் உற்பத்தி சுமார் 38.46 ஜிகாவாட் ஆகும். வறண்ட வானிலை காரணமாக நீர் மின் உற்பத்தி 23.1 வீதம் ஆக குறைந்துள்ளதாக இலங்கை மின்சார வாரியம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆனாலும் எந்தவிதமான தடைகளும் இல்லாமல் மின்சாரத்தை வழங்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை மின்சார வாரியம் தெரிவித்துள்ளது.

# இரு வாகன விபத்துகளில் மூவர் சாவு; நால்வர் காயம்

## வாரியபொல, புத்தளத்தில் சம்பவங்கள்

வாரியபொல - கடுபொத பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

ஓட்டோ ஒன்று பொலிஸாரின் ஜீப் ரக வாகனத்துடன் மோதுண்டதால் இந்த விபத்து நேர்ந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்தில் 04 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், புத்தளம் - நாகவில்லு பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் கடற்படை வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்து நேற்று முன்தினம் இரவு 8.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து பாலாவி சீமெந்துத் தொழிற்சாலைக்கு பொலித்தீன் கழிவுகளை ஏற்றிச் சென்ற கனரக லொறியுடன் புத்தளம் தம்பபண்ணி கடற்படை முகாமிலிருந்து கொழும்பு சென்ற கடற்படை வீரர் ஒருவர் மோதுண்டபோது அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த கடற்படை வீரர் திருகோணமலை பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய ஒருவரென பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் புத்தளம் ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. வாகன சாரதி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இறக்குமதியை இடைநிறுத்தாது விட்டிருந்தால் ரூபா பெறுமதி பன்மடங்கு வீழ்ச்சி கண்டிருக்கும்!

## அஜித் நிவாட் கப்ரால் தெரிவிப்பு



நாட்டில் இறக்குமதியை இடைநிறுத்தாது விட்டால் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 300 ரூபாவாக வீழ்ச்சி கண்டிருக்கும் என நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள அவர், யாழில் முதலீடுகள் மற்றும் கடன் வசதிகள் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்தார். இந்தக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் (சனிக்கிழமை) யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த அவர் -

இலங்கை ரூபாவின் பெறுமதி பெருமளவில் வீழ்ச்சியடைந்திருந்தால் நாட்டில் பெரும்பாலான இறக்குமதியாளர்கள் இறக்குமதியைக் கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்.

வடக்கு மாகாணத்திலிருந்து தங்கம் கடத்தலைத் தடுக்க, தங்கம் மீதான வரியை இந்தியா போன்று பராமரிக்க வேண்டும்.

மேலும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் பூங்காக்களை அமைக்க முன்வரும் முதலீட்டாளர்களுக்கு நீர்நிலைகளை அண்டிய பிரதேசங்களில் 15 தொடக்கம் 20 ஏக்கர் காணியை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. - எனத் தெரிவித்தார்.

குறித்த, கலந்துரையாடலில் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ். மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத்தலைவருமான அங்கஜன் இராமநாதன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், அமைச்சின் செயலாளர், மத்திய வங்கி அதிகாரிகள், பிரதேச அரச, தனியார் வங்கிகளின் முகாமையாளர்கள், முதலீட்டாளர்கள், நொதேர்ன் தனியார் வைத்தியசாலைப் பணிப்பாளர், பனை அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள், அச்சுவேலி கைத்தொழில் பேட்டை நிர்வாகத்தினர் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நாரங்கல மலைக்கு சுற்றுலா சென்ற இளைஞன் சடலமாக கண்டெடுப்பு!

பதுளை, மார்ச்.01

பதுளை - நாரங்கல மலைப் பகுதிக்கு சுற்றுலா சென்றிருந்த போது, காணாமற்போயிருந்த இளைஞன் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் அவிசாவளையைச் சேர்ந்த 22 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நண்பர்கள் 7 பேருடன் கடந்த வெள்ளிக்கிழமை இரவு, அவர் நாரங்கல மலைக்குச் சென்றுள்ளார்.

அதனைத் தொடர்ந்து கூடாரம் அமைத்து, அவர்களுடன் தங்கியிருந்த அவர், திடீரென வெளியில் சென்றுள்ளார்.

இவ்வாறு வெளியில் சென்றவர் நீண்ட நேரமாக திரும்பி வராதமையின் காரணமாக, ஏனைய அனைவரும் அவரைத் தேடிய போதும் கண்டுபிடிக்க முடியவில்லை.

இதனால் பொலிஸாருக்கு அவர்கள் அறிவித்துள்ளனர். அதனைத் தொடர்ந்து குறித்த இளைஞனை தேடும் நடவடிக்கை இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மதியம், மேற்படி இளைஞன் சடலமாக கண்டெடுக்கப்பட்டார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் இன்னும் முடிவில்லை என்கிறது ஐ.தே.க.!



கொழும்பு, மார்ச்.01

தேசியப் பட்டியல் நாடாளுமன்ற ஆசனம் தொடர்பாக இன்னமும் ஐக்கிய தேசியக் கட்சி ஒரு உடன்பாட்டை எட்டவில்லை என அக்கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

பல்வேறு பெயர்கள் முன்மொழியப்பட்டாலும், எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை என்றும் தான் தனிப்பட்ட முறையில் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பெயரை முன்மொழிந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் குறித்த பரிந்துரைக்கு ஐக்கிய தேசியக் கட்சி அங்கீகாரம் வழங்கவில்லை என வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

கடந்த ஒகஸ்ட் மாதம் நடந்த நாடாளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து தேசியப் பட்டியல் ஆசனத்திற்கு ஓர் உறுப்பினரை நியமிக்க ஐக்கிய தேசியக் கட்சி தவறிவிட்டது.

இந்நிலையில் தேர்தல் தோல்வியை அடுத்து கட்சியை மறுசீரமைக்கும் பணிகள் இடம்பெற்றுவருகின்றன என அந்தக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

# சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஜி.சீ.ஈ. சாதாரண பரீட்சைகள் நடக்கும்

## வடக்கில் ஏற்பாடுகள் பூர்த்தி என்கிறார் அரச அதிபர்



இன்று ஆரம்பமாகும் ஜி.சீ.ஈ. சாதாரணப்பரீட்சைக்குரிய ஏற்பாடுகள் அனைத்தும் யாழ்ப்பாண மாவட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இறுக்கமான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சை இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில் யாழ் மாவட்ட நிலைமை தொடர்பில் கருத்துரைக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் தற்போது கொரோனாநிலைமை யாழ் சிறைச்சாலையில் கைதிகள் 51 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்ட நிலைமை காணப்படுகின்றது.

இந்த நிலையில் யாழ் மாவட்டத்தில் 249 பொதுமக்களுக்கும் 51 சிறைச்சாலை கைதிகளுக்குமாக, மொத்தமாக 300 பேருக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலைமை காணப்படுகின்றது. 191 பேர் பூரண சுகமடைந்து வீடு திரும்பி உள்ளார்கள்

இந்த நிலையிலே 513 குடும்பங்களைச் சேர்ந்த 987 நபர்கள் சுய தனிமைப் படுத்தப்பட்டுள்ளார்கள்.

தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் வழமைபோல் பொதுமக்களின் செயற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன.

இருந்தபோதிலும், சுகாதார நடைமுறைகளை பின்பற்றி சுமார் 150 பேருக்குக் குறைந்தோர் மாத்திரம் பங்குபற்றி பொது நிகழ்வுகளை நடத்த சுகாதாரப் பிரிவால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தற்போதைய நிலையில் மிக மிக அவதானமாக இருப்பது முக்கியம்.

முதலில் வெளி மாவட்டத்திலிருந்து வருவோரால் மாத்திரமே தொற்று பரவுவதாகக் கருதப்பட்டது.

எனினும் தற்போது யாழ் மாவட்டத்தில் உள்ளோராலும் தொற்று பரவுதல் உறுதி செய்யப்படுகின்ற நிலையானது மிகவும் அபாயகரமானதாகக் காணப்படுகின்றது.

எனவே இந்த நிலையில் பொதுமக்கள் அலட்சிய போக்கை விடுத்து, தங்களையும் தங்களுடைய குடும்பத்தையும் பாதுகாப்பதோடு சமூகத்தினையும் பாதுகாக்க முன்வரவேண்டும்.

இந்த நிலைமை தொடர்பில் பொதுமக்களுக்கு தொடர்ச்சியாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வரும் நிலையில், பொதுமக்கள் அலட்சியமான மனப்பாங்குடன் அவற்றை அணுகுவதனையும் நாங்கள் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

எனவே கண்டிப்பாக சமூக இடைவெளி மற்றும் சுகாதார நடைமுறைகளை கட்டாயமாக பின்பற்றுவதன் மூலமே யாழ்ப்பாண மாவட்டத்தில், தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த முடியும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தடுப்பூசி வழங்கப்படும் வரை மிகவும் மக்கள் அவதானமாக செயற்பட வேண்டியுள்ளது.

தற்போதைய நிலையில் இன்று கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சை நாடு முழுவதிலும் ஆரம்பமாகவுள்ள நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தை பொறுத்த வரைக்கும் சுமார் 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சையில் தோற்ற இருக்கின்றார்கள் .

யாழ்ப்பாண மாவட்டத்தில் பரீட்சைக்குரிய ஏற்பாடுகள் அனைத்தும் சுகாதாரப் பிரிவினர் மற்றும் கல்வித் திணைக்களத்தினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள மாணவர்களுக்கு பரீட்சை எழுதுவதற்கான விசேட நிலையங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

குறிப்பாக சங்கானை பகுதியில் ஒரு மாணவனுக்குத் தொற்றுஉறுதி செய்யப்பட்டதன் காரணமாக கோப்பாய் சிகிச்சை நிலையத்தில் பரீட்சை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது

இந்த நிலைமையிலே கல்வி நடவடிக்கை பரீட்சை நடவடிக்கைகளை மிக பாதுகாப்பான முறையில்,அவற்றை மேற்கொள்வதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குறிப்பாக எழுவைதீவு பகுதியில் பரீட்சை நிலையம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும் தற்போது அந்த நிலையம் ஊர்காவற்றுறை பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

எனவே தற்போதுள்ள நிலைமையை உணர்ந்து மாணவர்கள் தங்களை பரீட்சைக்கு தயார்படுத்தி சுகாதார நடைமுறைகளை பின்பற்றி பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

அத்தோடு அங்கு கடமை புரிகிற ஆசிரியர்கள் மற்றும் சுகாதார பிரிவினர்கள் அவர்களுக்குரிய வழிகாட்டல்களை முன்னெடுப்பார்கள்.

தற்போதுள்ள நிலையில் மிகவும் அவதானமாக இந்த பரீட்சையினை முடிக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. எனவே சகல மாணவர்களும் இந்தப் பரீட்சையில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி பரீட்சைக்கு தோற்ற வேண்டும்.

விழிப்பாக இருந்து இந்த நிலைமை கடக்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

தற்போதுள்ள இடர் கால நிலைமையில் பொதுமக்களின் ஒத்துழைப்பின் மூலமே இந்த அபாய நிலையைக் கடந்து செல்ல முடியும். யாழ்ப்பாண மாவட்டத்தில் முதல் கட்டமாக சுகாதார பிரிவினருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு பொதுமக்களுக்கான தடுப்பூசி இந்த வாரம் அளவில் வழங்க எதிர்பார்க்கப்பட்டது எனினும் தடுப்பூசி வந்து சேராத காரணமாக வழங்க முடியவில்லை. - என அவர் மேலும் தெரிவித்தார்.

தோஷம் கழிப்பதாகக் கூறி மாந்திரீகர் நடத்திய

## பிரம்புத் தாக்குதலுக்கு இலக்காகி சிறுமி பலி!

தோஷம் கழிப்பதாகக் கூறி மாந்திரீகர் ஒரு ஒவரால் நடத்துப்பட்ட பிரம்புத் தாக்குதலுக்கு இலக்கான 9 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்த சம்பவம் இலங்கையில் இடம் பெற்றுள்ளது.

கம்பஹா மாவட்டத்தின் மீஹவத்த பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். தனது பிள்ளையைத் தீய தோஷம் தொற்றியுள்ளது எனத் தெரிவித்து பெற்றோர் தமது வீட்டுக்கு அருகில் உள்ள பெண் மாந்திரீகர் ஒருவரிடம் குறித்த சிறுமியை அழைத்துச் சென்றுள்ளனர்.

இதன்போது தோஷத்தை நீக்குவதாகக் கூறி சிறுமி மீது மாந்திரீகர் பிரம்பால் கடுமையாகத் தாக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அடி தாங்க முடியாது அந்தச் சிறுமி கூச்சலிட்டு கத்தும் சத்தம் நீண்ட நேரம் கேட்டது எனப் பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், சிறிது நேரத்தில் சிறுமி சுயநினைவிழந்துள்ளார் எனவும், இவ்வேளையில் அவரை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் குறித்த மாந்திரீகரைக் கைதுசெய்துள்ள மீஹவத்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இதுபோன்ற சம்பவங்கள் இதற்கு முன்னரும் இடம்பெற்றுள்ளது எனவும், இது தொடர்பில் பெற்றோர் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும் எனவும் பொலிஸ் பேச்சாளர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

## கொரோனாவில் இருந்து மீண்டார் பழ.நெடுமாறன்

கொழும்பு,மார்ச். 01

கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பு காரணமாக சென்னை ராஜீவ் காந்தி அரச பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த பழ.நெடுமாறன் குணமடைந்த நிலையில் வீடு திரும்பியுள்ளார்.

தமிழ்நாட்டு தமிழ்த் தேசியத் தளத்தில் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக சுமார் அரை நூற்றாண்டு காலமாக செயற்பட்டு வரும் தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ.நெடுமாறனுக்கு அண்மையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இதையடுத்து சென்னையில் உள்ள ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வந்தது.

சிகிச்சையின் பின்னர் அவரது உடல் நிலையில் முன்னேற்றம் காணப்பட்ட நிலையில், எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதி வரை எந்த நிகழ்ச்சிகளிலும் பங்கேற்க வேண்டாம் என மருத்துவர்களது ஆலோசனை வழங்கியிருந்தமைக்கு அமைவாக ஏற்கனவே பங்கேற்பதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டிருந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் இரத்துச் செய்யப்படுகின்றன என்று தலைமை நிலையப் பொதுச் செயலாளர் செ.ப.முத்தமிழ் மணி அறிவித்திருந்தார்.

இந்நிலையில், சிகிச்சையின் பின்னர் முழுமையாகக் குணமடைந்த பழ.நெடுமாறன் தற்போது வீடு திரும்பி ஓய்வில் இருக்கின்றார். ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக உறுதியுடன் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகச் செயற்பட்டு வரும் பழ.நெடுமாறன் குணமடைய வேண்டும் என ஈழத்திலும் புலத்திலும் உள்ள தமிழர்கள் விசேட வழிபாடுகளை நடத்தி வேண்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## முல்லையில் 10 கோடி ரூபா செலவில் கடற்றொழில் அபிவிருத்தி - டக்ளஸ்

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்றொழில்சார் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்வற்கு, சுமார் 10 கோடி ரூபாக்களைப் பயன்படுத்த முடியும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள கடற்றொழில் அமைச்சர், மாவட்டத்தின் பல்வேறு சமூக அமைப்புக்களையும் சந்தித்து மாவட்டத்தின் நிலைவரங்கள் தொடர்பாக கலந்துரையாடினார்.

இந்நிலையில், கடற்றொழிலாளர் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் (சனிக்கிழமை) நடத்திய கலந்துரையாடலிலேயே இந்த விடயத்தை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா - கடற்றொழிலாளர்களுக்குக் கௌரவமான வாழ்கைத் தரத்தை ஏற்படுத்துவதற்கு நிறைவான வருமான மார்க்கங்களை அதிகரிக்க வேண்டும்.

குறிப்பாக கடற்றொழில் மற்றும் நீர்நிலைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மீன்பிடிச் செயற்பாடுகளை சட்ட விதி முறைகளுக்கு அமைய ஒழுங்குபடுத்துவதுடன், அதிகளவான வருமானத்தைத் தரக்கூடிய தொழில் முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் கடற்றொழில் சமூகத்தினருக்கு சிறந்த வாழ்கை தரத்தை உருவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடக்கு - கிழக்கு மக்களுக்கு நிரந்தரமான தரமான பொருளாதார கட்டமைப்பை உருவாக்கும் நோக்கில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வருமாறு புலம்பெயர் உறவுகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்ட நிலையில், முல்லைத்தீவு கடற்றொழிலாளர்களின் தொழில்சார் அபிருத்திச் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தக் கூடியவாறு சுமார் 10 கோடி ரூபாக்கவை கொடையாளர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே, முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் கடந்த காலத்தைப் போன்று இல்லாமல் சரியான தரப்புக்களை இனங்கண்டு செயற்படுவார்களாயின், குறித்த தனியார் பங்களிப்புக்களையும் அதேபோன்று அரசாங்க திட்டங்களையும் ஒருமுகப்படுத்தி முல்லைத்தீவு மாவட்டத்தில் பாரிய கடற்றொழில் சார் அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியும். - என்று தெரிவித்துள்ளார்.

# ஜெனிவா: 46 இன் பரிந்துரைகள் அமுலாக என்ன உத்தரவாதம்?

- பனங்காட்டான் -



நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் சம்பந்தமாக இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை பற்றிய எழுத்து மூல அறிக்கையை பேரவையின் 49 ஆவது அமர்வில் மனித உரிமை ஆணையாளர் சமர்ப்பிக்க வேண்டும், அத்துடன், பொறுப்புக்கூறல் தொடர்பாக பேரவையில் விவாதிப்பதற்கு அனைத்தையும் உள்ளடக்கிய அறிக்கையை 51 ஆவது அமர்வில் சமர்ப்பிக்க வேண்டும் என்பதே இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள முதலாவது வரைபின் இறுதி வாசகம்.

ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 46வது கூட்டத்தொடர் கடந்த 22 ஆம் திகதி ஆரம்பமாகி இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது ஆரம்பமாவதற்கு முன்னரே சில விடயங்கள் பொதுவெளிக்கு வந்தன.

இம்முறை ஏதாவது ஆக்கபூர்வமாக இடம்பெறலாமென்ற நம்பிக்கை முழுமையாக இல்லாத நிலையிலும், சிலவேளை எதிர்பாராதவிதமாக ஏதாவது நிகழலாம் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. இதற்கு அடிப்படைக் காரணமாக இரண்டு விடயங்களைக் கூறலாம்.

முதலாவது - மனித உரிமை ஆணையாளர் மிச்சேல் பச்சிலற் அம்மையார் இலங்கை தொடர்பாக வெளியிட்டிருந்த அழுத்தம் திருத்தமான அறிக்கை. இந்த அறிக்கை வெளியான உடனேயே இலங்கை அரச தரப்பு கொதித்தெழுந்து காரசாரமான கருத்துகளை கண்களை மூடிக் கொண்டு வெளியிட்டது.

இரண்டாவது - தமிழ் தேசிய கட்சிகள் மூன்றினதும் தலைவர்களான இரா. சம்பந்தன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சி. வீ. விக்னேஸ்வரன் ஆகிய மூவரும் தமிழர் தரப்பு எதிர்பார்க்கும் விடயங்களை ஒரு கடிதமாக்கி, தாங்கள் ஒப்பமிட்டு ஒற்றுமையாக அனுப்பியது.

இச்சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி கோட்டாபய, பிரதமர் மஹிந்த, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் வெளியிட்ட கருத்துகள் ஒற்றைப் புள்ளியில் மையம் கொண்டன. எந்தக் காரணம் கொண்டும் எந்தப் பிரேரணையையும் நிறைவேற்ற விடமாட்டோம், சர்வதேசத்துக்கு அடிபணிய மாட்டோம், மனித உரிமைப் பேரவை அதன் வரையறையை மீறி செயற்படுகிறது - என்றவாறு இவர்களின் கருத்துகள் அமைந்தன.

அதேசமயம், மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையும், இலங்கையின் தட்டிக்கழிக்கும் போக்கும் பகிரங்கமானபோது, தமிழ் தேசிய தரப்பின் ஒற்றுமை ஏதோவொன்றை நடைபெறச் சாத்தியமாக்கும் என்ற எண்ணம் பலரிடமும் தோன்றியது.

இலங்கை விவகாரத்தைக் கையிலெடுத்த கூட்டு நாடுகளான பிரித்தானியா, ஜேர்மனி, கனடா, மொன்றிநீக்காரோ, வடமசிடோனியா ஆகிய ஐந்தும் வெளியிட்ட 46 ஆவது அமர்வுக்கான பிரேரணையின் முன்வரைவு வெளியானபோது ஏமாற்றமே ஏற்பட்டது. பேரவைக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் தமிழர் தேசிய தரப்பில் ஒப்பமிட்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், சி.வீ. விக்னேஸ்வரனும் தங்கள் ஏமாற்றத்தை உடனடியாகவே பகிரங்கப்படுத்தினர். ஆனால், இரா. சம்பந்தன் இது தொடர்பாக எதனையுமே தெரிவிக்காது வழக்கம் போன்று மௌனம் காக்கிறார்.

இதன் அடுத்த கட்டமாக, மெய்நிகர் இணைய அமர்வில் உரையாற்றிய இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தமது அறிக்கையை வாசித்தார். இது கோட்டாபயவின் ஆலோசகர்கள் தயாரித்துக் கொடுத்த அறிக்கை.

எடுத்த எடுப்பிலேயே ஒரு விடயம் இந்த அறிக்கையில் சுட்டப்பட்டது. பேரவையில் ஆணையாளரது அறிக்கை இலங்கைக்கு எதிரான பிரசார நடவடிக்கை என்பதே இலங்கை தரப்பு வாதம். (நவநீதம்பிள்ளை காலத்திலிருந்தே இதனைத்தான் இலங்கைத்தரப்பு கூறிவருகிறது). ஆணையாளரின் அறிக்கையை பேரவையின் 47 நாடுகளும் ஒட்டுமொத்தமாக நிராகரிக்க வேண்டுமெனவும் இலங்கையின் அறிக்கை வேண்டுகோள் விடுத்தது.

ஆணையாளரின் அறிக்கையிலுள்ள பரிந்துரைகளையும் முடிவுகளையும் இலங்கை திட்டவட்டமாக நிராகரிக்கிறது என்றும் இதில் சொல்லப்பட்டது.

இலங்கை அரசு இணைஅனுசரணை வழங்கிய 30/1 பொறுப்புக்கூறல் தீர்மானத்திலிருந்து வெளியேறுவதாக ஏற்கனவே அறிவித்தமையை மீண்டும் உறுதி செய்த இலங்கை அரசு, சில நாடுகளின் ஒருதலைப் பட்சமான நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் அறிவித்தது. இலங்கையின் அறிக்கையின் இறுதியில் கௌதம புத்தரின் மூன்று கோட்பாடுகள் சுட்டிக்காட்டப்பட்டது. அந்த வாசகங்கள் பின்வருமாறு அமைந்தன.

'எல்லா உயிரினங்களுக்கும் பாதுகாப்பு இருக்கட்டும். எல்லா உயிரினங்களும் துன்பத்திலிருந்து விடுபடட்டும். எல்லா உயிரினங்களும் நன்றாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கட்டும் என்பவையே மேற்கோள் காட்டப்பட்ட புத்தரின் சிந்தனைகள்.

இங்கு தெரிவிக்கப்பட்ட முதலிரண்டு விடயங்களையும் இலங்கை அரசாங்கங்கள் திரிகரணசுத்தியாக கடந்த 70 ஆண்டுகளாக கடைப்பிடித்திருக்குமானால் இலங்கையின் எல்லா உயிரினங்களும் நன்றாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்திருக்குமென்பதை இதனைச் சொன்னவர்களுக்கே நினைவுபடுத்த வேண்டியுள்ளது.

அவ்வாறு அது நடந்திருந்தால், மனித உரிமைப் பேரவையின் முன்னால் இலங்கை நிறுத்தப்பட வேண்டிய தேவை வந்திராது. அடுத்தடுத்து பல தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டிய தேவை வந்திராது. இலங்கை மீது மனித உரிமை ஆணையாளர்கள் காட்டமான அறிக்கைகளை விட வேண்டிய தேவையும் ஏற்பட்டிராது. மொத்தத்தில், இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றிருக்க வேண்டிய நிலைமைகூட ஏற்பட்டிருக்காது.

புத்தரின் பௌத்த தர்மத்தை மீறி அதனை அவமதித்து அதன்மேல் நடந்து ஆட்சி பரிபாலனம் செய்யும் சிங்கள பௌத்த ஏகாதிபத்தியம், அவரது அற்புதமான கோட்பாட்டை இனவழிப்பிலிருந்தும் அதற்கான பொறுப்புக்கூறலிலிருந்தும் தப்புவதற்கு பயன்படுத்துவது கேவலமானது. அது புத்தரையே அவமதிப்பதாகும்.

இதனை எழுதிக் கொண்டிருக்கும் வேளையில் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை தொடர்பாக உறுப்பு நாடுகள் தங்கள் கருத்துகளை முன்வைக்க ஆரம்பித்துள்ளன. சில நாடுகளைத் தவிர மற்றையவை எந்தப் பக்கத்துக்குச் சாயும் என்பதை நிச்சயமாக கூற முடியாதுள்ளது.

பார்வையாளர் அந்தஸ்திலுள்ள அமெரிக்கா மனித உரிமைப் பேரவை ஆணையாளரின் அறிக்கைக்கு பூரண ஆதரவு அளித்துள்ளது. மனித உரிமைகள் கண்காணிப்பகம் பேரவை ஆணையாளரின் பரிந்துரைகளுக்கும் முடிவுகளுக்கும் ஆதரவு கூறியுள்ளது.

அதேசமயம், அமர்வின் இறுதியில் தேவைப்படின் மாற்றுவழி தேட வேண்டியிருக்கும் என்ற கருத்தும் வெளிப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டு அங்குள்ள பல்வேறு பிரமுகர்களுடனும் சந்திப்புகளை நடத்திய இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலைனா பிரெப்லிப்ஸ் அவர்களும் மாற்றுவழி பற்றிய கருத்துகளை முன்வைத்துள்ளார்.

'பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வதேச நியமங்களுக்கு அமைவாக நீதியை பெற்றுக்கொடுக்கும் பொறுப்பு இலங்கைக்குள்ளது. பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு நீதி கிடைக்குமென 12 ஆண்டுகளாக காத்திருக்கிறார்கள். வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளும் அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்று தெரியாது காத்திருக்கின்றனர். இவைகளைப் பெற்றுக்கொடுக்க மாற்றுவழிகள் குறித்து ஜெனிவா பேரவையில் ஆராயப்படுகிறது என்று அமெரிக்கத் தூதுவர் பதிவிட்டுள்ளார்.

பேரவையின் அமர்வில் உரையாற்றிய இந்தியப் பிரதிநிதி, தமிழர் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்ற இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழான 13வது திருத்தத்தை நிறைவேற்ற வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

46வது அமர்வின் இறுதியில் இலங்கை தொடர்பான பிரேரணை வாக்கெடுப்புக்கு வரும். 47 உறுப்பு நாடுகளில் 24இன் ஆதரவு கிடைத்தால் மட்டுமே தீர்மானம் நிறைவேறும். இல்லையேல் என்பதற்கு விடை தேட வேண்டுமானால், பேரவையின் கூட்டத் தொடர் முறைமையைப் புரிந்து கொள்ளவேண்டும்.

ஒவ்வொரு வருடமும் மார்ச், ஜூன், செப்ரெம்பர் ஆகிய மாதங்களில் மூன்று தனித்தனி அமர்வுகளாக பேரவை கூடும். 2009 மே மாதம் இனஅழிப்புடன் இலங்கை அரசு போரை முடிவுக்குக் கொண்டு வந்தது. அதேயாண்டு ஜூன் மாத அமர்வில் இலங்கை அரசு தனது பிரேரணையை இங்கு முன்வைத்தது.

2012, 2013, 2014 ஆம் ஆண்டுகளில் சர்வதேசநாடுகள் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பிரேரணைகளை முன்வைத்தன. 2015 இல் இலங்கையின் இணைஅனுசரணையுடன் 30/1 இலக்க பொறுப்புக்கூறல் பிரேரணையை அமெரிக்கா முன்வைத்தது. 2017 ஆம் ஆண்டில் இதனை வலியுறுத்தும் 34/1 இலக்க பிரேரணையும், 2019 ஆம் ஆண்டில் இது தொடர்பான 40/1 இலக்க பிரேரணையும் முன்வைக்கப்பட்டன.

இவை எல்லாமே கானல் நீராகின. எதனையுமே இலங்கை நிறைவேற்றவில்லை. நல்லாட்சி அரசுக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு காலநீடிப்பு பெற்றுக் கொடுத்து, சிங்கள தேசம் பிரேரணையை நீர்த்துப் போகச் செய்ய உதவியது.

இப்போது ஜெனிவாவில் ஐந்து நாடுகள் கூட்டாக வைத்துள்ள பிரேரணையின் இறுதி வாசகம் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை தெரிந்து கொண்டால், அதன்பின் என்ன நடைபெறப்போகிறது என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

'நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் சம்பந்தமாக இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை பற்றி எழுத்து மூல அறிக்கையை பேரவையின் 49 ஆவது அமர்வில் மனித உரிமை ஆணையாளர் சமர்ப்பிக்க வேண்டும், அத்துடன், பொறுப்புக்கூறல் தொடர்பாக பேரவையில் விவாதிப்பதற்கு அனைத்தையும் உள்ளடக்கிய அறிக்கையை 51 ஆவது அமர்வில் சமர்ப்பிக்க வேண்டும் என்பதே இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள முதலாவது வரைவின் இறுதி வாசகம்.

49 ஆவது அமர்வு என்பது 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இடம்பெறும். 51 ஆவது அமர்வானது 2022 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்துக்குரியது. ஆக, ஏதாவது இடம்பெறலாமென எதிர்பார்க்கும் காலம் பன்னிரண்டு மாதங்களிலிருந்து பதினெட்டு மாதங்களுக்கு பின்தள்ளப்படுகிறது. இக்காலம் மேலும் மேலும் பின்னோக்கி நகர்த்தப்படாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

பன்னிரண்டு வருடங்கள் காத்திருந்தவர்களுக்கான காலம் 13 வருடங்கள் ஆக்கப்படுகிறது. மேலும் எத்தனை வருடங்கள்?

தண்டிக்கவோ, கண்டிக்கவோ முடியாத பிரேரணைகள், தீர்மானங்களால் என்ன பயன் என்று ஜனவரி மாத கடைசி வாரத்தில் இப்பந்தியில் குறிப்பிட்டதையே மீண்டும் கூறவேண்டியுள்ளது.

நன்றி: 'பதிவு' இணையம்

“
புத்தரின் பௌத்த தர்மத்தை மீறி அதனை அவமதித்து அதன்மேல் நடந்து ஆட்சி பரிபாலனம் செய்யும் சிங்கள பௌத்த ஏகாதிபத்தியம், அவரது அற்புதமான கோட்பாட்டை இனவழிப்பிலிருந்தும் அதற்கான பொறுப்புக்கூறலிலிருந்தும் தப்புவதற்கு பயன்படுத்துவது கேவலமானது. அது புத்தரையே அவமதிப்பதாகும்.

காலைக்கதிர்
Kalaikkathir




# மெய்நிகர் வகுப்பறை 09

## Online Classroom

**ஜனனீ தேவானந்த்**
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)



கொவிட் 19 பிந்திய நவீன விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மாற்றங்கள் சமகாலத்தில் உலகின் கல்வி முறையில் தவிர்க்க முடியாத ஒருங்கிணைந்த பகுதியாக மெய்நிகர் கல்வியை இணைத்துள்ளன. கொவிட் 19 இற்கு முந்தைய காலங்களில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு ஒன்லைன் கற்றல் முறை செல்வாக்கு செலுத்தியிருந்தாலும், கொவிட் - 19 சகாப்தத்தில் உயர் கல்வித் துறைகளின் கற்பித்தல் மற்றும் கற்றல் செயன்முறையின் தவிர்க்க முடியாத பகுதியாக இது மாறிவிட்டது. கொவிட் - 19 பாரம்பரிய உயர் கல்வி முறைக்கு பாரிய சவால்களை முன்வைத்ததால், ஒவ்வொரு அரசாங்கமும் மெய்நிகர் கல்வியைத் தங்கள் உயர் கல்வி முறையில் இணைத்துக்கொள்ள வேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்கு ஆளாகின. உலகளவில் மெய்நிகர் கல்விக்கு ஒரு தீவிர தேவை இருந்தது, இருக்கிறது.

இலங்கையைப்பொறுத்தளவில் கொவிட் -19இற்கு முன்னர் உயர் கல்வித் துறையில் மெய்நிகர் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. ஆனாலும், கொவிட் - 19 பாதிப்புக் காரணமான அந்த நெருக்கடியின் போது உயர்கல்வி நடவடிக்கைகளைத் தொடர மாற்று தீர்வாக ஒன்லைன் கல்வி முறையை ஊக்குவிக்க அரசாங்கத்தை தூண்டியது. இதனால், ஒன்லைன் கல்வி தற்போது இலங்கையின் உயர்கல்வித் துறையின் இன்றியமையாத அங்கமாக மாறி வருகின்றது.

ஆயினும் இலங்கையில் மெய்நிகர் கல்வியை பாடசாலைகளிலும் உயர்கல்வித் துறையிலும் அமுல்படுத்துவதில் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. பல தடைகள், மட்டுப்பாடுகள் தொடர்கின்றன.

கொவிட் 19 வைரஸ் தொற்று முதன்முதலில் சீனாவின் ஹூபே மாகாணத்தின் தலைநகரான வுஹானில் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் கண்டுபிடிக்கப்பட்டது. ஆரம்பத்தில் சீனாவில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்திய கொவிட் - 19, நான்காயிரத்துக்கும் மேற்பட்ட இறப்புகளின் பதிவுகளுடன் சீன அரசாங்கத்தால் உடனடியாக எடுக்கப்பட்ட பூட்டுதல் மற்றும் பிற சமூக தொலைதூர நடவடிக்கைகளால் ஓரளவிற்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இது பின்னர் உலகம் முழுவதும் பரவியது, அதன் விளைவு சீனாவை விட மற்ற நாடுகளில் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்துவதாக இருக்கிறது. இன்றைய நிலைவரப்படி அமெரிக்காவில் ஐந்து இலட்சம் பேர் இறந்துள்ளார்கள். இது இரண்டாம் உலகயுத்தத்தில் ஏற்பட்ட இழப்பைவிட அதிகமானது என் அமெரிக்க ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். இதற்காக அமெரிக்காவில் ஐந்து நாள்கள் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

உலகெங்கிலும் உள்ள பெரும்பாலான நாடுகள் நாடு தழுவிய பூட்டுதலை அறிவித்து, கொவிட் - 19 பரவுவதைக் கட்டுப்படுத்த சமூக தொலைதூர நடவடிக்கைகளை எடுத்தன. இந்த நடவடிக்கைகள் ஒரு குறிப்பிட்ட வரம்பிற்குள் நோய் பரவுவதைக் குறைக்கக் கணிசமாக பங்களித்தன, இருப்பினும் அவை மோசமான தொற்றுநோய்க்கு ஒரு தீர்வாக இல்லை. தற்போது உலகம் நோயுடன் வாழுதல் என்ற கொள்கை அடிப்படையில் செயல்படுகின்றன. தடுப்பூசி அறிமுகப்படுத்தப்பட்டு வேகமாக தடுப்புமருந்தேற்றும் பணி நடக்கிறது. அதே வேளை உருமாற்றம் பெற்ற வைரஸ் பரவல் ஒரு அலையாக பலநாடுகளை அச்சுறுத்தி வருகின்றது.



கல்வித் துறையைப் பொறுத்தவரை, பெரும்பாலான அரசாங்கங்கள் வைரஸ் சமூக பரவுவதைத் தடுக்க பள்ளிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்களை தற்காலிகமாக மூடின. இது ஒரு புத்திசாலித்தனமான முடிவாகக் கருதப்பட்டாலும், இது உலகெங்கிலும் உள்ள மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மோசமாக பாதித்தது. தொடர்ச்சியான பூட்டுதல் மாணவர்களின் கல்வியில் மட்டுமல்ல, மாணவர்களின் மன ஆரோக்கியத்திலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கொவிட் -19 காரணமாக பள்ளிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டமையால் உலகம் முழுவதும் 150 கோடிக்கும் அதிகமான மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சர்வதேச பல்கலைக்கழகங்களின் சங்கம் மதிப்பிட்டுள்ளது.

இலங்கையில் கொவிட் - 19 இன் முதல் கண்டுபிடிப்பு 2020 ஜனவரி 27 ஆம் திகதி சீன சுற்றுலாப் பயணிகளுடன் கண்டறியப்பட்டது, மேலும் பாதிக்கப்பட்ட உள்ளூர் நபர் 2020 மார்ச் 11 அன்று அடையாளம் காணப்பட்டார். இதனையடுத்து, நோய் பரவுவதை கட்டுப்படுத்த இலங்கை அரசு தந்திரோபாயமாக பொதுச் சுகாதார கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது. பின்னர் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்தது.

இலங்கை அரசாங்கம் 2020 மார்ச் 12 அன்று நாட்டின் அனைத்து பல்கலைக்கழகங்களையும் மூடி அனைத்து கல்வி நடவடிக்கைகளையும் நிறுத்தியது. மார்ச் 20 அன்று நாடு தழுவிய ஊரடங்கு உத்தரவையும் அரசாங்கம் விதித்தது. இந்த காலகட்டத்தில், இலங்கையின் உயர்கல்வித் துறை பல்வேறு சவால்களை எதிர்கொண்டது. பதினைந்து தேசிய பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற உயர்கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டன. இதனால் மாணவர்களின் கற்பித்தல் மற்றும் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. பல்கலைக்கழக சேர்க்கை, மதிப்பீடு மற்றும் தேர்வு, பட்டமளிப்பு விழாக்கள், ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடவடிக்கைகள் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டன.

பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் தங்கள் கல்வி மற்றும் பிற நிர்வாக நடவடிக்கைகளை தொழில்நுட்பசாதனங்கள் மற்றும் பயன்பாடுகளின் உதவியுடன் வீட்டிலிருந்து பணி செய்ய அனுமதித்தன. இதனால் பலர் முன்னனுபவக்குறைபாடுகளுடனே மெய்நிகர் தளத்தில் சஞ்சரித்தார்கள், பல விரிவுரையாளர்கள் மெய்நிகர் வகுப்புக்களை முன்னனுபவமின்றி தொடங்கினர்.

பாரம்பரிய கல்வி முறைக்கு பதிலாக ஒன்லைன் கல்வியை அறிமுகப்படுத்துவது இலங்கையில் உயர் கல்வித் துறையில் ஒரு கட்டமைப்பு மாற்றமாக பார்க்கப்படலாம். ஒரு நெருக்கடியால் இது நேர்ந்திருக்கிறது. இலங்கை பல்கலைக்கழகங்களின் பெரும்பாலான கல்வியாளர்கள் மற்றும் நிர்வாக ஊழியர்களுக்கு இந்த வகையான ஒன்லைன் கல்வி புதியது.

நீண்ட காலமாக, இலங்கை பல்கலைக்கழகங்களில் நேருக்கு நேர் கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்முறை நடைமுறையில் உள்ளது. இதில் அதிகமான பல்கலைக்கழகங்களில் சிமாட்போட் கற்பித்தல் கூட இல்லை. விரிவுரைகள் மிகப்பாரம்பரியமான முறையில் நோர்ட்ஸ் சொல்ல மாணவர்கள் அதனை எழுதும் முறையிலேயே நடக்கின்றன. எனவே, இந்த பாரம்பரியத்தை உடைத்து, புதுமையான ஒன்லைன் சூழலில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வது கடினமான ஒன்றாகக் கருதப்படுகிறது. பல பல்கலைக்கழகங்கள் ஒன்லைன் கல்வி நடவடிக்கைகளைத் தொடங்கத் தயங்குகின்றன அல்லது தாமதிக்கின்றன. பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளும் தங்கள் கடமைகளை மேற்கொள்வதில் சிக்கல்களை எதிர்கொள்கிறார்கள். நவீன கருவிகள் மற்றும் தொழில்நுட்பத்தில் திறமை இல்லாத விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பிற ஊழியர்கள் பல சவால்களை எதிர்கொண்டுள்ளனர்.

ஒன்லைன் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு ஏற்படும் செலவைக் குறைக்க அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்தது. இலங்கை கல்வி மற்றும் ஆராய்ச்சி நெட்வொர்க் (LEARN) மூலம் 'ஜூம்' பயன்பாட்டைப் பயன்படுத்தி கல்வி நடவடிக்கைகளைத் தொடர அரசாங்கம் உதவியது. சில வலை வழங்குநர்கள் பல்கலைக்கழகங்களுக்கு இலவச ஒன்லைன் அணுகலை வழங்கினர்.

ஏப்ரல் 2020 இறுதியில் நாடு தழுவிய ஊரடங்கு உத்தரவை அரசாங்கம் நீக்கியது. அதைத் தொடர்ந்து, பல்கலைக்கழக வழிகாட்டுதல்கள் ஆணையம் சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடித்து ஜூலை 6 ஆம் திகதி பல்கலைக்கழகங்களின் கல்வி நடவடிக்கைகளை மீண்டும் தொடங்க அனுமதித்தது. இருப்பினும், ஒன்லைன் கல்வி தொடர்ந்தும் இலங்கை பல்கலைக்கழகங்களின் கல்விச் செயல்பாட்டின் குறிப்பிடத்தக்க பகுதியாக மாறியுள்ளது.

கொவிட் 19 தொற்றுநோய் இலங்கைப் பல்கலைக்கழகங்களின் உயர் கல்வித் துறைகளின் நிர்வாகிகளை, விரிவுரையாளர்களை, உபவேந்தர்களை ஓர் ஒன்லைன்சார் புதிய கட்டமைப்புக்குள்ளும் நிரலொழுங்கிற்குள்ளும் கொண்டு வந்தன. அதே வேளை குறிப்பாக மாணவர்களையும் ஊழியர்களையும் ஒரு புதிய நிகழ்வுகளைச் சமாளிக்க அணிதிரட்டவும், பல்கலைக்கழகங்களின் பல்வேறு பங்குதாரர்களுடன் இணைந்து செயல்படும் அந்த சவால்களை எதிர்கொள்ள ஆக்கபூர்வமான மற்றும் புதுமையான யோசனைகளைக் கொண்டு வரவும் கட்டாயப்படுத்தியது. கல்வி ஊழியர்கள், மாணவர்கள், நிர்வாக மற்றும் கல்விசாரா ஊழியர்கள் மெய்நிகர் உலகு நோக்கி சவால்களுடன் பயணிக்க முயற்சிக்கிறார்கள்.

(தொடரும்...)

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது? கோட்டா அரசு பதில் சொல்லியே தீர வேண்டும்

## வலியுறுத்துகின்றார் சம்பந்தன்

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விரைவில் சந்திக்கவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். இது உண்மைச் செய்தி எனில் அதை ஜனாதிபதி அல்லது அவரின் ஊடகப்பிரிவுதான் உறுதிப்படுத்த வேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு உண்மையில் என்ன நடந்தது என்ற கேள்விக்கு கோட்டாபய அரசு பதில் சொல்லியே தீர வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேரில் சந்திக்கவுள்ளார் எனின், அது தொடர்பில் ஜனாதிபதி அல்லது அவரின் ஊடகப் பிரிவு உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும். அதை விடுத்து இந்தச் சந்திப்பு தொடர்பில் வேறு அதிகாரிகள் கருத்துத் தெரிவித்திருந்தால் அது தொடர்பில் எம்மால் பதிலளிக்க முடியாது.

தற்போது ஜெனிவா கூட்டத் தொடர் நடைபெற்று வருகின்றது. இதையொட்டி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் நீதிக்கான போராட்டங்களும் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வலுப்பெற்றுள்ளன. இந்தநிலையில், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களை ஜனாதிபதி விரைவில் சந்திக்கவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு உண்மையில் என்ன நடந்தது என்ற கேள்விக்கு இலங்கை அரசு பதில் சொல்லியே தீர வேண்டும். பொறுப்புக்கூறல் கடமையிலிருந்து இலங்கை அரசு நழுவ முடியாது.



இந்தக் கடமையிலிருந்து இலங்கை தப்ப சர்வதேசமும் ஒருபோதும் இடமளியாது - என்றார்.

# சுயநல அரசியலில் முன்னணி!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் குற்றச்சாட்டு



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமது சுயநல அரசியலுக்காக எமது அமைப்பின் பெயரைப் பயன்படுத்தி போராட்டம் செய்து, மூக்குடைபட்டு வருகின்றது என வடக்கு - கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பு குற்றஞ்சுமத்தியுள்ளது.

அந்த அமைப்பு ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையில் இவ்வாறு குற்றஞ்சுமத்தியுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எமது போராட்டங்களைத் திசை திருப்பி, அரசை திருப்திபடுத்த முயல்கின்றது. சரிந்து செல்லும் தமது அரசியல் செல்வாக்கை மீளக் கட்டியெழுப்புவதற்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளைப் பயன்படுத்தி, அதாவது அவர்களது உணர்வுகளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், வடக்கு - கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் அமைப்பால் கிளிநொச்சியில் ஒழுங்குபடுத்தப்பட்ட மக்கள் போராட்டத்தைக் குழப்பும் வகையிலும் இலங்கை அரசைத் திருப்திப்படுத்தும் வகையிலும் தற்போது யாழில் குழப்பகரமான போராட்ட சூழலை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

போலியான அரசியல் தலைமைக்கு வாக்களித்தமையையிட்டு, மக்கள் தலைகுனிய வேண்டிய நிலைக்கு அவர்களின் செயற்பாடுகள் தற்போது காணப்படுகின்றன.

சுயலாப அரசியலுக்காகப் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் செயற்பாட்டைச் சிதைக்கும் இவர்களது செயற்பாடுகள் மிகவும் கண்டிக்கப்பட வேண்டியவை.

சக கட்சி உறுப்பினரின் வாக்கைக் கொள்ளையடித்து, வெட்கமின்றி அரசியல் செய்யும் இவர்களை மக்கள் அறிந்து செயற்பட வேண்டும் - என்றுள்ளது.

# மைத்திரிக்கு எதிராக நடவடிக்கையா? உயர்நீதிமன்றமே தீர்மானம் எடுக்கும்

## அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு



கொழும்பு, மார்ச். 01

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதா? இல்லையா? என்பதை உயர்நீதிமன்றமே தீர்மானிக்கும் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.


உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்தி வந்த ஆணைக்குழு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக வழக்கு விசாரணைகளை மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ள விடயம் தொடர்பில் அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அவர்,

முன்னாள் ஜனாதிபதி தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதா? இல்லையா? என்பதை உயர்நீதிமன்றமே தீர்மானிக்கும். இது தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது.

இதேவேளை, ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு திட்டமிட்டே முன்னாள் ஜனாதிபதிக்கு எதிராகக் குற்றம் சுமத்தியுள்ளது என விமர்சனங்களை ஏற்றுக்கொள்ள முடியாது. முன்னாள் ஜனாதிபதியின் ஆட்சிக்காலத்திலேயே இந்த விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருந்தது – என்றார்.

# மன்னார் சோதனைச் சாவடிகளில் பறிபோகின்றனவாம் பொருள்கள்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,பெப்.28

மன்னார் மாவட்டத்தின் தேவைக்காக எடுத்துவரப்படும் பொருள்களைச் சோதனைச் சாவடிகளில் உள்ள இராணுவத்தினர் பறிக்கின்றனர் என விற்பனை முகவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள சில சோதனைச்சாவடிகளில் சோதனை என்கின்ற பெயரில் வாகனங்களை இராணுவத்தினர் இடைமறித்து சோதனை இடுவது மாத்திரம் இன்றி தங்களுக்குத் தேவையான பொருள்களை வாகனத்தில் இருந்து எடுத்து கொள்கின்றனர் எனவும் வெளி மாவட்டங்களில் இருந்து விற்பனைக்காக வருபவர்களும் விற்பனைக்காக செல்பவர்களும் குற்றம் சுமத்தியுள்ளனர்

தொடர்சியாக மன்னார் பிரதான பாலப்பகுதியிலும் வங்காலை, குஞ்சுக்குளம் பகுதியிலும் உள்ள சில சோதனைச்சாவடிகளில் இத்தகைய நிகழ்வுகள் நடக்கின்றன எனவும், விற்பனைக்காக வரும் போதும் விற்பனை முடிந்து செல்லும் போதும் இவ்வாறான செயற்பாடுகளில் இராணுவத்தினர் ஈடுபடுகின்றனர் எனவும், தங்களால் எதுவும் செய்ய முடியாத நிலையில் இராணுவத்தினர் எடுக்கும் பொருள்களை விருப்பமின்றி அவர்களிடமே கொடுத்து விட்டு வருகின்றனர் எனவும், இவ்வாறான செயற்பாடுகளால் தங்களின் வியாபார இலாபம் அதிக அளவில் குறைவடைகிறது எனவும் விற்பனையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்

இந்தப் பிரச்சினை தொடர்பாக யாரை சந்திப்பது, யாரிடம் முறையிடுவது எவ்வாறு இந்த அத்துமீறல் செயற்பாட்டை தடுப்பது என்று கூடத் தங்களுக்கு தெரியவில்லை எனவும், எனவே மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவர், மாவட்ட அரசாங்க அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தில் தலையிட்டு உரிய நடவடிக்கை மேற்கொண்டு இதனைத் தடுக்க வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட சிறு தொழில் விற்பனை முகவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

பச்சைப்பயறு - இதன் தாயகம் இந்தியா மற்றும் ஆசியா என்று கூறப்படுகிறது. இதன் தாவரவியல் பெயர் விக்னோ ரேடியேட்டா என்பதாகும். லெகூமினேசியே என்ற குடும்பத்தைச் சேர்ந்தது. இந்தியாவில் அதிகளவில் பயிரிடப்படுகிறது. தமிழர் சமையலில் பச்சைப்பயறு ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. ஆடி மற்றும் புரட்டாதிகளில் செய்யலாம். உவர் மற்றும் அமிலத்தன்மை இல்லாத செம்மண் சாகுபடிக்கு ஏற்றது .நிலத்தை மூன்று அல்லது நான்கு தடவை நன்கு உழவு செய்ய வேண்டும். இதனால் மண் நன்கு பக்குவம் அடையும்..

ஏக்கருக்கு 2 தொன் மக்கிய உரம் இட்டு மீண்டும் உழவு செய்ய வேண்டும். அடி உரமாக 20 கிலோ யூரியா மற்றும் 120 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 85 கிலோ பொட்டாயும் கலந்து இட வேண்டும். நிலத்தை பாத்திகளாகவோ அல்லது 30 செ.மீ. (1 அடி) அகலபார்களாகவோ அமைத்துக் கொள்ள வேண்டும். ஒரு ஏக்கருக்கு 10 - 12 கிலோ விதைகள் தேவைப்படும்.

ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கார்பன்டாசிம் அல்லது திரம் அல்லது 4 கிராம் ட்ரைக்கோடெர்மா விரிடி அல்லது 10 கிராம் சூடோமோனாஸ் கொண்டு விதை நேர்த்தி செய்யவேண்டும்.

குழிக்கு இரண்டு விதை என்ற விகிதத்தில் ஊன்ற வேண்டும். செடிக்குச் செடி 10 செ.மீ இடைவெளி இருக்க வேண்டும். இறவை முறையில் விதைத்தவுடன் நீர் பாய்ச்ச வேண்டும். பின்னர் மூன்றாம் நாள் தண்ணீர் அவசியம் பாய்ச்ச வேண்டும். அதன் பின்பு 10 முதல் 15 நாள்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்ச வேண்டும்

பூப்பு மற்றும் காய்ப்பிடிப்பு சமயங்களில் நீர் பாய்ச்சுதல் மிகவும் அவசியம். காய்ப்பிடிப்பின் போது நீர் சரிவர பாய்ச்சாவிட்டால் கடின விதைகள் தோன்றுவதற்கு வாய்ப்புகள் உள்ளது.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர் Kalaikkathir

# மாகாண சபைகளுக்கான தேர்தலை ஜூன் மாதம் நடத்த அரசு யோசனை!



## கொழும்பு ஊடகத்தில் செய்தி

**மாகாண சபைகளுக்கான தேர்தலை எதிர்வரும் ஜூன் மாதத்தில் நடத்துவதற்கு அரசு எதிர்பார்த்துள்ளது எனச் செய்தி வெளியாகியுள்ளது.**

**இது தொடர்பான அறிவித்தலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விரைவில் வெளியிடவுள்ளார் என்று கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களுடன் ஜனாதிபதி விசேட கலந்துரையாடலொன்றை நடத்தவுள்ளார் எனவும், இதன்போது, அவர் இது தொடர்பாக அறிவிக்கலாம் எனவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாகாண சபைகளின் பதவிக்காலம் முடிவடைந்து வருடங்கள் கடந்துள்ள போதும், அந்தச் சபைகளுக்கான புதிய உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தலை நடத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் ஜூன் மாதத்தில் தேர்தலை நடத்துவதற்கான ஆயத்தங்களை அரசு முன்னெடுத்துவருகின்றது எனத் தெரியவந்துள்ளது.

கடந்த நல்லாட்சி அரசில் புதிய முறைமையில் தேர்தலை நடத்துவதற்காகத் திருத்தங்களை மேற்கொண்ட போதும், எல்லை நிர்ணயம் அறிக்கை தொடர்பான பிரச்சினைகளால் அந்தத் திருத்தத்தை செயற்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டது.

எவ்வாறாயினும் தற்போதைய அரசு ஏற்கனவே இருந்த விகிதாசார முறைமையிலேயே தேர்தலை நடத்த எதிர்பார்த்துள்ளது எனவும், அது தொடர்பான திருத்தங்களை எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வுகளில் முன்வைத்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கவுள்ளது எனவும் மேற்படி செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ‘மொட்டு’க் கட்சி மீது அதிருப்தி

# தனி வழி செல்ல தயாராகும் சு.க.?



ஸ்ரீலங்கா பொதுஜன முன் னணியின் செயற்பாடுகளால் கடும் அதிருப்தியில் இருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மொட்டு அணியினரின் செயற்பாடுகளை வெளிப்படையாகவே விமர்சித்து வருகின்றது.

தமது கட்சி உறுப்பினர்களுக்கு உரிய கவனிப்பு இல்லை எனவும், தேர்தலுக்காக மட்டுமே தமது கட்சி பயன்படுத்தப்படுகின்றது எனவும் சுதந்திரக் கட்சிக்கார்கள் ஊடகங்களிடம் தமது உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலின்போது சஜித் அணியுடன் இணைந்து போட்டியிடவேண்டும், தற்போது ரணில் தரப்பு அவர்களுடன் இல்லை என்பதால் கூட்டணி சாத்தியமாகும் எனக் கட்சி உறுப்பினர்கள் சிலர், சு.கவின் மத்திய செயற்குழுவிடம் யோசனை முன்வைத்துள்ளனர்.

அத்துடன், மொட்டுக் கட்சியுடன் பேச்சு நடத்தி பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என மேலும் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர். இதனால் சு.கவுக்குள்ளும் கருத்து மோதல் வலுத்துள்ளது.

விரைவில் தீர்க்கமானதொரு முடிவு எடுக்கப்படவுள்ளது என அறிய முடிந்தது.

# உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குற்றவாளிகளை தூக்கிலிடுவோம்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



தமது அரசில் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணையை முன்னெடுத்து அதன்மூலம் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இன்று மக்கள் சந்திப் பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை அண்மையில் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது.

இதையடுத்து பல்வேறு தரப்பினர் தமது கருத்துக்களை முன்வைத்துவரும் நிலையில் எதிர்க்கட்சித் தலைவரும் தமது நிலைப்பாட்டை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குறித்த விசாரணை அறிக்கையின் ஒரு பகுதி எமக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனை வைத்து எவ்வாறு உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்த முழு விபரங்களை அறிய முடியும்?

இவ்வாறு முழுமையற்ற விசாரணை அறிக்கையை எதற்காக நாட்டுக்கு அரசு சமர்ப்பிக்கின்றது?

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்து எமது ஐக்கிய மக்கள் சக்தி அரசு முழுமையான விசாரணை முன்னெடுக்கும். தேவை ஏற்பட்டால், பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணையை முன்னெடுத்து குற்றம் இழைத்த அனைவரையும் தூக்கிலிட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

# 4 இலட்சத்து 42 ஆயிரம் பேருக்கு இதுவரை கொரோனாத் தடுப்பூசி

கொழும்பு, பெப்.28

இலங்கையில் கடந்த மாதம் 29 ஆம் திகதி முதல் நேற்று வரை 4 லட்சத்து 41ஆயிரத்து 976 பேருக்குக் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியாவால் இலங்கைக்கு 5 லட்சம் கொரோனாத் தடுப்பூசிகள் நன்கொடையாக வழங்கப்பட்டன. முதற்கட்டமாக கொரோனா ஒழிப்புச் சமரில் முன்களப் பணியாளர்களாகச் செயற்படும் சுகாதார மற்றும் பாதுகாப்பு பிரிவினருக்குத் தடுப்பூசி கடந்த மாதம் 29 ஆம் திகதி முதல் ஏற்றப்பட்டது.

29ஆம் திகதி 5 ஆயிரத்து 286 பேருக்கும், 30ஆம் திகதி 32 ஆயிரத்து 539 பேருக்கும், 31ஆம் திகதி 21 ஆயிரத்து 329 பேருக்கும், பெப்ரவரி முதலாம் திகதி 36 ஆயிரத்து 396 பேருக்கும், 2ஆம் திகதி 23 ஆயிரத்து 217 பேருக்கும், 3ஆம் திகதி 21 ஆயிரத்து 147 பேருக்கும் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டது.

அத்துடன், பெப்ரவரி 4ஆம் திகதி 6 ஆயிரத்து 413 பேருக்கும், 5ஆம் திகதி 9 ஆயிரத்து 983 பேருக்கும், 6ஆம் திகதி 3 ஆயிரத்து 838 பேருக்கும், 7ஆம் திகதி 1,625 பேருக்கும், 8ஆம் திகதி 5 ஆயிரத்து 989 பேருக்கும், 9ஆம் திகதி 6 ஆயிரத்து 431 பேருக்கும், 10ஆம் திகதி 2 ஆயிரத்து 532 பேருக்கும், 11ஆம் திகதி 1,362 பேருக்கும் தடுப்பூசி போடப் பட்டது.

12ஆம் திகதி ஆயிரத்து 110 பேருக்கும், 13ஆம் திகதி 7 ஆயிரத்து 457 பேருக்கும், 14ஆம் திகதி 2 ஆயிரத்து 695 பேருக்கும், 15ஆம் திகதி 3 ஆயிரத்து 589 பேருக்கும், 16ஆம் திகதி 3 ஆயிரத்து 225 பேருக்கும், 17ஆம் திகதி 14 ஆயிரத்து 242 பேருக்கும், 18ஆம் திகதி 23 ஆயிரத்து 67 பேருக்கும், 19ஆம் திகதி 30 ஆயிரத்து 307 பேருக்கும், 20ஆம் திகதி 39 ஆயிரத்து 78 பேருக்கும் தடுப்பூசி ஏற்றப்பட்டது.

21ஆம் திகதி 35 ஆயிரத்து 912 பேருக்கும், 22ஆம் திகதி 15 ஆயிரத்து 583 பேருக்கும், 23ஆம் திகதி 12 ஆயிரத்து 555 பேருக்கும், 24ஆம் திகதி 11 ஆயிரத்து 696 பேருக்கும், 25ஆம் திகதி 14 ஆயிரத்து 866 பேருக்கும், 26ஆம் திகதி 13 ஆயிரத்து 164 பேருக்கும், 27ஆம் திகதி (நேற்று) 35 ஆயிரத்து 343 பேருக் கும் தடுப்பூசி போடப் பட்டது.

# இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்தக் கோரி யாழில் உண்ணாவிரதப் போர்!

**(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)**

இலங்கையை சர்வதேச நீதிமன்றத் தில் பாரப்படுத்தக் கோரி தொடர்ச்சியான சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டம் யாழ்ப்பா ணம் நல்லை ஆதீனம் முன்பாக யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகங்களின் மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையை சர்வதேச குற்ற வியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதினூடாக அரசால் புரியப்பட்டுள்ள போர்க் குற்றங்கள் மற்றும் மனித நேயத்துக்கு எதிரான குற்றங்களுக்கு நீதி கிடைக்கும் என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்தோடு தமிழ் இனத்துக்கு எதிரான இனவழிப்புக்கு சர்வதேச நீதி வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மேலும், தமிழ் இனத்தின் மீதான இனவழிப்புத் தொடராது இருப்பதற்கு தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளான மரபு வழித் தாயகம், சுயநிர்ணய உரிமை, தமிழ்த் தேசியம் என்பன அங்கீகரிக்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் குறிப் பிட்டுள்ளனர்.

இந்தச் சுழற்சி முறையிலான உணாவிரதப் போராட்டத்தில் மதத் தலைவர்களும் இணைந்துகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# அப்பாவித் தமிழர்களின் அபிலாஷைகளை மலினப்படுத்தும் சுமந்திரனின் தமிழரசோடு எப்படி இணைந்து பயணிப்பது?

## காட்டத்துடன் கேட்கின்றரார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி.



தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து கட்டமைக்கப்படவுள்ளதாகக் கூறப்படும் தமிழ்த் தேசியப் பேரவையில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி பங்கேற்க மாட்டாது என அக்கட்சியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எவ்விதமான தீர்மானத்தினை எடுத்துள்ளது என்பது குறித்து வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள அரசியல் கட்சிகளை இணைத்து தமிழ்த் தேசியப் பேரவை என்ற கட்டமைப்பை உருவாக்குவது நல்லவிடயமொன்றுதான். இது பற்றி நீண்ட நாள்களாக கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. நாங்கள் ஒற்றுமைக்கு தடையானவர்கள் அல்லர். அதனை விரும்பாதவர்களும் அல்லர். ஆனால் ஒற்றுமை என்பது கொள்கை அடிப்படையிலானதாக இருக்க வேண்டும். அண்மைய காலங்களில் ஒற்றுமையின் பெயரால் தனிநபர் நலன்களை அடிப்படையாக வைத்தே செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றமை அனைவரும் அறிந்த விடயமாகும்.

அந்த வகையில் தமிழ்த் தேசியப் பேரவையில் பங்கேற்பதற்கான அழைப்பொன்றை மாவை.சோ.சேனாதிராஜா விடுத்திருந்தார். எனினும் நாம் அதில் பங்கேற்பதில்லை என்றே தீர்மானித்திருக்கின்றோம்.

அதற்கு முதலாவது காரணம் கொள்கை அடிப்படையிலானது. இரண்டாவது காரணம், சுமந்திரன், சாணக்கியன் போன்றவர்களின் தமிழ் மக்களின் அபிலாஷைகளை மலினப்படுத்தும் நடவடிக்கைகள் ஆகும்.

இதற்கு அண்மைய உதாரணமொன்றை இங்கு குறிப்பிடலாம் என்று கருதுகின்றேன். பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான பேரணியானது ஏறக்குறைய ஒரு லட்சம் மக்களின் எழுச்சியான பங்கேற்பில் நடைபெற்றதொன்றாகும். மூன்று கூட்டு அரசியல் தரப்புக்கள் ஜெனிவாவுக்கு எழுத்து மூலமான நிலைப்பாடுகளை ஒன்றிணைந்து அனுப்பியதன் பின்னர் நடைபெற்ற இந்த பேரணியானது நிச்சயமாக ஜெனிவாவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஆவணத்தினை வலுப்படுத்துவதாக அமைந்திருந்தது.

ஆனால் சாணக்கியன், சுமந்திரன் போன்றவர்கள் அதனை தமது அரசியல் நலன்களுக்காக பயன்படுத்தியமையோடு மட்டும் நிற்காது, அந்த உணர்வு பூர்வமான பேரணியை இலங்கை அரசாங்கத்திடம் முன்வைக்கும் பத்து அம்சக் கோரிக்கையுடன் மட்டுப்படுத்தவே அதிகளவில் முனைப்புக் காட்டினர்.

குறிப்பாக சுமந்திரன் இந்த விடயத்தில் தீவிரமாகச் செயற்பட்டமையோடு, நாடாளுமன்றிலும் அவ்வாறான கருத்துக்களையே பதிவு செய்து தமிழர்களின் அபிலாஷைகளையே மலினப்படுத்திவிட்டார். இவ்விதமான செயற்பாட்டை மேற்கொண்டவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளராகவும், தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தராகவும் தொடர்ந்தும் செயற்படுவதற்கு இடமளித்திருக்கின்றார்கள்.

அவர் மீது இந்த விடயங்கள் தொடர்பில் எவ்விதமான கேள்விகளும் கேட்கப்படவில்லை. நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அப்பாவி மக்களின் கோரிக்கைகள், எதிர்பார்ப்புக்களை மலினப்படுத்துபவரை பிரதிநிதியாகக் கொண்டிருக்கும் அரசியல் கட்சி பங்கேற்கும் தமிழ்த் தேசியப்பேரவையில் நாம் எவ்வாறு பங்கேற்க முடியும்?

அப்பேரவையானது கொள்கை வழியில் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையில் பயணிக்கும் என்று எவ்வாறு கருத முடியும்? ஆகவே தான் அவ்விதமான பொய்யான செயற்பாட்டாளர்களுடன் இணைந்து பயணிப்பதில்லை என்று தீர்மானித்துள்ளோம். – என்றார்.

# இனப்படுகொலைக்கு நீதிவேண்டி சாகும் வரையில் உண்ணாவிரதம்!

## பிரிட்டனில் முன்னெடுப்பு





இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு நீதிவேண்டி பிரிட்டனில் உள்ள அம்பிகை செல்வகுமார் என்ற பெண் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று ஆரம்பித்துள்ளார்.

இலங்கையை குற்றவியல் நீதிமன்றில் நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கை உட்பட 4 கோரிக்கைகளைப் பிரிட்டன் அரசிடமும் ஐக்கிய நாடுகள் சபையிடமும் முதன்மையாக முன்வைத்து அவர் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

லண்டன் நாடாளுமன்ற சதுக்கத்தில் இந்தப் போராட்டம் இடம்பெற்று வருகின்றது.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

பிரிட்டன் தலைமையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்போகும் தீர்மானமானது, இலங்கைக்கு மேலும் அவகாசத்தையே வழங்கப்போவதாக அறிகின்றோம். இந்தச் செய்தி எம்மை வேதனையடையச் செய்கின்றது. எனவே, இவ்வாறான அவகாசங்களை வழங்காமல், தாயகத்தில் இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடும் இன நெருக்குவாரங்கள் மேலும் தொடராமல் இருப்பதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் – என்றார்.

### வடக்கு மாகாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத் தில் நேற்று 259 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இவர்களில் எவருக்கும் தொற்று இல்லை. இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 7 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இவர்களில் 5 பேர் மன்னாரைச் சேர்ந்தவர்களாவர். மன்னார் நகரில் சிகையலங்கரிப்பு நிலையம் நடத்துபவருக்கு கடந்த வாரம் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் அவருடன் தொடர்புடையோர் சுயதனிமைப்படுத்தப்பட்டனர். இந்தநிலையில் நேற்று நால்வருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. மேலும், ஒருவர் மன்னார் பொது வைத்தியசாலையில் தொற்று அறிகுறிகளுடன் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவிலுள்ள தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த ஒருவருக்கும் நேற்று தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இவர் கொழும்பில் ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளராகக் கடமையாற்றும் நிலையில் நவாலியில் வசிக்கும் அவரது மனைவிக்கு நேற்றுமுன்தினம் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதேவேளை, வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் நேற்று தொற்று கண்டறியப்பட்டது.

இவர் ஏற்கனவே தொற்றாளராகச் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய நிலையில் மீளவும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது தொற்று உறுதிப்படுத்தப்பட்டது – என்றார்.

### மரண வீட்டில் குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் மதுராநகரை சேர்ந்த இரு பகுதியினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

இதில் இருவருக்கிடையே ஆரம்பத்தில் ஏற்பட்ட வாய்த் தகராறு பின்னர் கைகலப்பாக மாறியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் 20, 22, 25, 28 , 30 ஆகிய வயதுகளுடைய ஆச்சிபுரத்தைச் சேந்த நால்வரும், மதுரா நகரைச் சேர்ந்த இருவரும் காயமடைந்தனர். அவர்கள் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் சிதம்பரபுரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து மேலதிக விசாரணைகளை வவுனியாப் பொலிஸாருடன் இணைந்து அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர். (100)

# இலங்கையில் பௌத்த அமைப்புகளை தடைசெய்ய ராஜபக்ஷ அரசு முயற்சியா?

## நாலக தேரர் சந்தேகம்

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை மூலம் தேசிய பௌத்த அமைப்புக்களைத் தடை செய்ய ராஜபக்ஷ அரசு முயற்சிக்கின்றதா? எனத் தேசிய ஒருங்கமைப்பு அமைப்பின் செயலாளர் பெங்கமுவே நாலக தேரர் சந்தேகம் வெளியிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முழுமையற்ற அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

இந்த அறிக்கை பௌத்த அமைப்புக்கள் நாட்டில் அடிப்படைவாதத்தைத் தூண்டுகின்றன என்ற தவறான நிலைப்பாட்டை சமூகத்தின் மத்தியில் தோற்றுவித்துள்ளது.

குண்டுத் தாக்குதல் சம்பவத்தை திட்டமிட்டது யார்? என்ற உண்மைக் காரணியை ஆணைக்குழு பகிரங்கப்படுத்தவில்லை.

இதனை அறிக்கையின் பிரதான குறைபாடாகக் கருதவேண்டும். நாட்டு மக்கள் எதிர்பார்த்த புதிய விடயங்கள் ஏதும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்படவில்லை.



விசாரணை அறிக்கை அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய பௌத்த அமைப்புக்களை அரசு தடை செய்ய முயற்சிக்கின்றதா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இஸ்லாமிய அடிப்படைவாதம் நாட்டில் பல விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. அடிப்படைவாதத்துக்கு எதிராக பௌத்த அமைப்புக்கள் செயற்பட்டுள்ளன. இதனைத் தவறு என்று குறிப்பிட முடியாது.

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் தொடர்பில் உண்மைத் தன்மையை அரசு பொறுப்புடன் வெளிப்படுத்த வேண்டும்.

தற்போது வெளியிடப்பட்டுள்ள அறிக்கைக்கு எதிராக பௌத்த தேரர்கள் அனைவரும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளோம். இது தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச்சுக்களை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம் – என்றார்.

# கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்றவர்கள் தமிழ்க் கூட்டமைப்பில் மீள இணைய வேண்டும்

## ரெலோ செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. அழைப்பு



தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) பேச்சாளராக குருசாமி சுரேன் எமது கட்சியின் தலைமைக் குழுவால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவர் இனி கட்சியின் விடயங்களை உத்தியோகபூர்வமாக வெளியிடுவார். அத்துடன் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்றவர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இணைய வேண்டும் என தமிழ் ஈழ விடுதலை இயக்கம் கோரிக்கை விடுகிறது என தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும், வன்னி நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் அலுவலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ் ஈழ விடுதலைக் இயக்கத்தின் (ரெலோ) தலைமைக் குழுக் கூட்டம் நடைபெற்றது. தமிழ் ஈழ விடுதலை இயக்கத்திற்கு ஒரு பேச்சாளர் தேவை என்ற காரணத்தினால் எமது கட்சியின் பேச்சாளராக குருசாமி சுரேன் அவர்கள் செயற்படுவார். அதனை ஏகமனதாக தலைமைக்குழு தெரிவு செய்துள்ளது. அவர் அனைத்து விடயங்களையும் கையாளுகின்ற அதேநேரம், எமது கட்சி எடுக்கின்ற தீர்மானங்களையும், அரசியல் ரீதியாக இங்கு இருக்கின்ற தூதரகங்களை சந்திக்கின்ற செயற்பாடுகளையும் அவர் ஊடாகவே இனி மேற்கொள்வோம்.

தமிழ் கட்சிகள் எல்லோரும் ஒருமித்த கொள்கையின் கீழ் செயற்படக் கூடிய வடிவமைப்பை தமிழ் தேசியக் கூட்டமைப்பு கொள்ள வேண்டும். அதை செய்வதற்கான முழு முயற்சியையும் நாம் செய்யத் தயாராக இருக்கின்றோம். ஏனைய கட்சிகள் இணைகின்ற போது தனிப்பட்ட கட்சிகள் தமக்கு அதிகாரங்களை கூட்டுகின்ற செயற்பாட்டை மேற்கொள்ள முடியாது. தேர்தலில் தோற்றவர்களை சேர்க்கக் கூடாது என நாம் யோசிக்கவில்லை. அது மக்களின் விருப்பம். ஒற்றுமையை கொண்டு வர வேண்டும். அதனைதான் மக்கள் விரும்புகிறார்கள்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான பேரணி எமது ஒற்றுமைக்கும், இறையாண்மைக்கும் கிடைத்த வெற்றி. இதில் தோற்றவர்கள், வென்றவர்கள் என்று அல்லாமல் எமது மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும். அதற்கான கடமை எமக்கு இருக்கிறது. மக்களது விடுதலைக்காக அவர்களது உரிமைக்காக குரல் கொடுக்கின்றோம் என்று சொல்லிக் கொண்டு தோற்றவர்கள் என்று புறந்தள்ள முடியாது. மக்களுடைய சிந்தனை அவர்களது விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும்.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் நான்தான் சம்பந்தன் ஐயா அவர்களை கூட்டமைப்பின் தலைவராக தெரிவு செய்தேன். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்கள் கூட்டமைப்பின் பேச்சாளராகத் தான் இருக்கவில்லை எனத் தெரிவித்து, நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் பெயரை கூறினார். அதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் வினோ எனது பெயரை பரிந்துரைத்தார். இதனால் சர்ச்சை உருவானது. நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனை கொறாடவாக முன்மொழிந்தார்கள். இற்றைவரை பேச்சாளர் விடயம் தீர்வை எட்டவில்லை. எந்தவொரு கட்சியும் எல்லா விடயத்திலும் ஆளுமை செலுத்தும் கட்சியாக கூட்டமைப்பில் இருக்கக் கூடாது. அந்தவகையில் சின்ன சின்ன விடயங்கள் பகிர்ந்தளிக்கபட வேண்டும். ஜனநாயகம் என்பது அந்த வரம்புகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். கூட்டமைப்பு பேச்சாளர் விடயம் குழப்பத்தில்தான் உள்ளது. இதனை தீர்க்குமாறு சம்பந்தன் ஐயாவிடம் முன்வைத்துள்ளோம். அந்த பதவி கிடைக்கவில்லை என்ற ஜனநாயக அரவணைப்பு தற்போது இல்லாத போதும், தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்றவர்கள் இணையும் போது அரவணைப்பு இருக்க வேண்டும். தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்று பேச்சளவில் சொல்லிக் கொண்டு மக்கள் அதனை ஆதரிக்கின்றார்கள் என்பதற்காக, எந்தவொரு கட்சியும் தனிமை பாராட்டுகின்ற அல்லது அதிகாரத்தை கையில் எடுக்கின்ற நிலைப்பாட்டில் இருக்க கூடாது.

மக்களது விருப்பம் முக்கியம். பிரிந்து சென்றவர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இணைய வேண்டும் எனத் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் கோரிக்கை விடுக்கிறது. ஜனநாயக முறையில் எல்லோரது கருத்துக்களும் கேட்கப்பட வேண்டும் என்பது தான் எல்லா கட்சிகளினதும் விருப்பமாகவுள்ளது. மக்களது ஆணையை மீண்டும் கூடுதலாக பெற வேண்டுமாக இருந்தால் எல்லா கட்சிகளும் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இணையும் போது, அவை சமனாக நடத்தப்பட வேண்டும். எல்லா கட்சிகளும் மக்களுக்காக செயற்படுவனவாகச் சொல்கிறார்கள். அவர்கள் உளத்தூய்மையுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணைய வேண்டும். - எனத் தெரிவித்தார்.

# ஜனாஸா நல்லடக்க விவகாரம்; அஸ்கிரிய பீடம் எதிர்ப்பில்லை

கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதியளித்துள்ளமையில் எமக்கு எந்த பிரச்சினையும் இல்லை. சுகாதார தரப்பினரின் ஆலோசனைக்கமைய இந்த விவகாரத்தில் தீர்மானத்தை எடுக்குமாறுதான் நாம் ஆரம்பத்திலிருந்து வலியுறுத்தினோம் என அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்க மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

சடலங்களை அடக்கம் செய்ய அனுமதி வழங்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ள நிலையில் இந்த தீர்மானம் தொடர்பில் அஸ்கிரிய பீடத்தின் நிலைப்பாட்டை வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை தகனம் செய்வது தொடர்பில் பல்வேறு சர்ச்சைகள் ஏற்பட்டன. இவ்விடயத்தில் சுகாதார தரப்பினரின் ஆலோசனைக்கமைய தீர்மானங்களை எடுக்குமாறு நாம் ஆரம்பத்திலிருந்தே வலியுறுத்தினோம். இது அரசியல்வாதிகளுடன் தொடர்புடைய விடயமல்ல. எனவே அவர்களால் இவ்விடயத்தில் தீர்மானம் எடுக்க முடியாது.

எவ்வாறிருப்பினும் தற்போது இந்த பிரச்சினைக்கான தீர்வு கிடைத்துள்ளது. எனினும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனை வழிகாட்டல் அடுத்தவாரம் வெளியிடப்படும் என்று கூறப்பட்டுள்ளது. யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படாதவகையில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். - என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




# கைத்தொலைபேசி சிம்கள் மீட்பு



வெலிக்கடை சிறைச்சாலையில் முன்னெடுக்கப்பட்ட சிறப்புத் தேடலின் போது கைத்தொலைபேசி உள்ளிட்ட தடை செய்யப்பட்ட பல பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சிறைச்சாலை ஆணையாளர் சந்தன ஏகநாயக்கவின் உத்தரவில் வெலிக்கடை சிறைச்சாலையின் தேவாலயப் பிரிவில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சோதனையின் போது 11 கைத்தொலைபேசிகள், 04 சிம் கார்டுகள், 08 பட்டரிகள் மற்றும் 06 தொலைபேசி சார்ஜர்கள் கண்டுபிடிக்கப்பட்டன எனக் கூறப்படுகிறது.

இதேவேளை ஏனைய சிறைச்சாலைகளிலும் இது போன்று தேடுதல் முன்னெடுக்கப்படும் என்றும் சிறைச்சாலை ஆணையாளர் குறிப்பிட்டார்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.03.2021 இல் வெளியிடப்பெற்றது.